# திராவிடநாடு

1–5–60 | வார வெளியீடு | விலை 16 காசு


## உணர்வு பெற்றெழு!

[ அ. மு. உசேன் ]

மீட்பது நோக்கம்;—இந்த
மேன்மைத் திராவிட நாட்டினை இன்றே!
கேட்பதும் ஆக்கம்;—புகழ்
கொண்டுள திராவிடர் கொண்டனர் ஊக்கம்
பாட்டுத்தான் ஏனோ?—உயர்
பண்பார் திராவிடம் பிரிவதால் தானோ?
நாட்டது நன்மை;—எங்கள்
நல்லசீர்க் கொள்கையின் உண்மையின் தன்மை!

முத்தமிழ் வல்லோர்,—முன்
ஆட்சிக்(கு) இலக்கணம் ஆக்கிய நல்லோர்!
இத்தமிழ் நாட்டைத்—தமிழர்
ஏற்றமாய் ஆண்டனர், காணுவாய் ஏட்டை!
சத்தில்லா இந்தி—இன்று
சந்தில் நுழையுதே, மாற்றுவோம் அதனை!
கொத்தாகக் கெட்டோம்!—நம்மில்
ஒற்றுமை இன்மையால் அடிமையும் பட்டோம்!

போதுமே தொல்லை!—இனிப்
பொங்கி எழாமல் இருப்பதும் இல்லை!
காதுமே கேளா!—வடவர்;
கட்டுக்கும் உட்பட்ட நம்மவர் துன்பம்!
ஓதுவோம் சேர்ந்து!—நாம்
ஓங்கிட வேண்டியே, திராவிடப் பாட்டு!
ஊதுவோம் சங்கு!—நம்
உரிமையைக் காத்திட உணர்வு பெற்றெழு!

# ஏன் வெகுண்டாய், ஏதன்ஸே....?

—[பூவார். கணேசன்]—

ஏதன்ஸ் நகரமே அலெக்ஸாண்டரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு வாழ்வதைத் தாளாது பொருமிப் புகைந்து கொண்டிருக்கும்போது, சிந்தனை வேந்தன் அரிஸ்டாட்டில் மாத்திரம் தன் 'லிஸியம் கலைக் கழகத்தில்' சற்றும் சலனமற்றவராய், பலதரப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

அலெக்ஸாண்டரின் ஆட்சியை எதிர்த்து ஏதன்ஸில் ஒரு புரட்சியை உருவாக்குவது அச்செயல் வீரனுக்கு ஒரு பொருட்டல்ல. கால வெந்தீயென ஒருகலவரத்தை எழுப்புவது மிக மிக எளிதுதான்.

"அப்படியே ஒரு புரட்சியால் வெற்றி கண்டாலும், இந்த மாஸிடோனிய மன்னன் இல்லாவிடில், இன்றிருக்கும் சூழ்நிலையில், வேறொரு வேந்தன் ஏதன்ஸில் தன் கொடியைப் பறக்கவிடுவான் கூடிய விரைவில்" என்று எண்ணிய அரிஸ்டாட்டில் அலெக்ஸாண்டரின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஏன்......? ஆதரித்தே வந்தார்! அவரையே அறியாமல் அவரிதயத்தின் ஒரு பகுதி வினவியது, "உனது பரம்பரை மாஸிடோனிய அரண்மனை உப்பைத்தின்று வளர்ந்ததுதானே...? மன்னர் மன்னன் அலெக்ஸாண்டர் உன் மாணவன் அல்லவா...? ...பிலிப்பின் அழைப்பை ஏற்று நீ சென்றுதானே கட்டுக்கடங்காத காளையாகத் திரிந்த அலெக்ஸாண்டரை, கடமையில் நாட்டங்கொள்ளச் செய்தாய்...?"

"என் உயிருக்காக என் தந்தைக்கும், என் வாழ்விற்காக என் குருநாதர் அரிஸ்டாட்டிலுக்கும் நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்." என்று அலெக்ஸாண்டர் கூறியதைக் கேட்டு நீ மனம் நிறையவில்லையா?

இதயத்தினால் ஏவப்பட்ட இவ்வினாக் கணைகள்தாம், அரிஸ்டாட்டிலைச் சற்று நிதானிக்கச்செய்தன.

தனது குடும்பத்தில் தோன்றிய எத்தனையோ துன்பச் சுழல்களை உள்ளடக்கி, ஆசாபாச உணர்ச்சிகட்கு நெஞ்சகத்தில் இடமளிக்காத நேர்மையாளர் அரிஸ்டாட்டில். அலெக்ஸாண்டருக்கும் தனக்குமிடையே நிலவும் 'ஆசிரிய—மாணவ'ப் பாசத்தை மட்டும் உதறித் தள்ள முடியாமல் திணறினார்.

அவரிடம் குடிகொண்டிருந்த இவ்வெண்ணம் அவர்மீது ஏதன்ஸ் மக்களால் வாரிக் கொட்டப்படும் நெருப்புப் பார்வையையும் வெறுப்புச் சொற்களையும் தாங்கிக் கொள்ளுமளவிற்கு அவரைத் தயார் செய்துவிட்டது.

அரிஸ்டாட்டிலின் அன்பையும், ஆதரவையும் அலட்சியம் செய்யவில்லை. அலெக்ஸாண்டரும் தனது நல்லாசானால் தோற்றுவிக்கப்பட்ட 'லிஸியம் கழகத்தை' வளர்த்த பெருமையில், அவனுக்கும் பெரும் பங்கு உண்டு. அது மட்டுமல்ல... அறிஞன் அரிஸ்டாட்டிலின் அறிவுரைகட்கு என்றுமே அவனது மனக்கோல் அலாதி எடைபோடும்.

*

அன்று ஏதன்ஸின் இதயமென எண்ணப்படும் சதுக்கமொன்றில், தன்னலமற்ற தத்துவ ஞானி அரிஸ்டாட்டிலின் வெண்சிலையை நாட்டுவதில் உள்ளம் நிறைந்து நின்றான் அலெக்ஸாண்டர். 'தனது ஆசிரியரைப் பாராட்டுகிறோம்' என்ற நிறைவு அவன் மனக்குடத்திலிருந்து நிரம்பி வழிந்தோடியது.

ஆனால் அப்பெரு விழாவிற்கு, அறிவைப் போற்றும் திருவிழாவிற்கு, ஏதன்ஸ் மக்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் மிகச் சிலரே வந்திருந்தனர். ஏன்...?

அறிவு பிறந்ததே ஏதன்ஸில் தானே...! அங்கு அறிவை மதிக்க மனிதர்கள் இல்லையா...? அறிவாளியைப் பாராட்ட ஆட்களுக்குப் பஞ்சமா...? ஆராய்ச்சியாளனுக்குச் சிலையெடுப்பதில் விருப்பமில்லையா...? அல்லது... அரசியல் மேதை, தத்துவ ஞானி அரிஸ்டாட்டிலைத் தம் மனப்பீடத்திலிருந்து இறக்கி விரட்டிவிட்டார்களா...?

இல்லை...' இல்லை... ஏதன்ஸ் மக்களின் உள்ளத்தில் எழும்பி நின்ற ஒருமித்தஎண்ணம் இதுவே தான். "எங்களை அடிமைகொண்டு ஆளும் அந்நியன் ஒருவனால் எங்கள் அறிவுமேதை பாராட்டப்படுவதா? அதை ஏற்றுக்கொள்ள எங்ஙனம் துணிந்தார் அரிஸ்டாட்டில்...?! இதைக் கண்ணுறும் போது எங்களது மனம் புழுங்குகின்றது."

சுருண்ட குறுந்தாடி தாங்கிய முகத்தில், அறிவு பொங்கிப் பூத்து நிற்கும் அரிஸ்டாட்டிலின் பளிங்குச் சிலை நாட்டப்பட்டது. ஏதன்ஸின் எதிர்ப்பு அதற்குத் தடைபோடவில்லை.

காலம் நகர்ந்தது...

*

செய்தி கேட்ட ஏதன்ஸ் மக்கள் தம் செவிகளையே சந்தேகித்தனர். உள்ளத்தில் உற்சாகம் குமிழியிட்டு "கிண்கிணி"ச் சிரிப்பாகச் சிரித்தோடியது. 'மன்னருக்கு மன்னன் தங்களை அடிமைகொண்ட ஆழியான், தத்துவத்திற்கு எல்லை கண்டோனின் தனிப்பெரும் மாணவன், மாஸிடோனிய பெருவேந்தன் அலெக்ஸாண்டர் மாண்டுவிட்டான்' என்ற செய்தி ஏதன்ஸின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

# சீனத்தாரின் சீலம்!

18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (1—5—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 42

சீனத்துக்கும் இவ்வுபகண்டத்துக்குமிடையே ஏற்பட்ட எல்லைத் தகராறு தீராத பிரச்சினையாக மாறும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இருபெரும் நாடுகளின் முதல்வர்களும் ஒன்று கூடிப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டதைக் கண்ட எவரும் ஒரு நல்ல முடிவையே எதிர்பார்த்திருப்பர்.

தொலைவில் இருந்துகொண்டு துடுக்குத்தனமாகப் பேசிய சீனத்து முதல்வர், கிட்ட வந்து பேச ஒப்புக்கொண்டார் என்ற செய்தியைப் படித்ததும், ஏதோ நல்ல முடிவோடுதான் பேச வருகிறார் என்று பொதுவாக நம்பப்பட்டது.

ஆனால், நடந்ததோ முற்றிலும் வேறு.

முரண்பட்ட கருத்துக்களோடு இரு தலைவர்களும் தங்கள் பேச்சுக்களை முடித்துக்கொண்டு விட்டார்கள்.

தொலைவில் இருந்து கிட்டவந்த சூ-என்-லாய், "நான் கிட்ட வந்துவிட்டதாக எண்ணி ஏமாந்து விடாதீர்கள்; நான்தான் கிட்ட வந்தேனே தவிர, என்னுடைய கருத்துக்கள் உங்களுக்குச் சிறிதும் எட்டாத தொலைவிலேயே உள்ளன'' என்ற போக்கில் நடந்துகொண்டிருக்கிறார்.

எல்லைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமது "வாதம் சரியானது என்று தயங்காது பேசி விட்டுச் சென்றிருக்கிறார் சீனத்தார்.

வந்த விருந்தாளியிடம் வம்பெதற்கென்ற முறையில் பண்டித நேருவும் இராசதந்திரமாக நடந்து கொண்டிருக்கிறார். அப்படி நடந்துகொள்வதுதான் இப்போதைக்குத் தேவையுங்கூட.

இருவரும் கூடிப்பேசிப் பயன் ஏற்படவில்லை என்ற போதிலும், இதோடு இந்தப் பிரச்சினையை நிறுத்திவிடாமல், இன்னும் இதிலுள்ள சிக்கல்களைச் சரிவர ஆராய்ந்து விளக்கம்தர இந்நாட்டு அதிகாரிகள் மூலம் ஓர் வாய்ப்பை உண்டாக்கலாம் என்ற முடிவோடு தங்கள் பேச்சை முடித்திருக்கின்றனர்.

இந்த அதிகாரிகளின் ஆராய்ச்சியால் ஏற்படும் முடிவு, இரு பெருந்தலைவர்களாலுமே பேசி முடிவு காணப்படாத ஒரு புதுமையை உண்டாக்கி, இந்த எல்லைத் தகராறு இனி இல்லை, என்ற நிலையை உண்டாக்கிவிடும் என்பதை எவரும் எளிதில் நம்பிவிட மாட்டார்கள்.

இப்போதைக்கு இந்த பிரச்சினையைத் தட்டிக் கழிக்க இந்த ஏற்பாடு ஒரு சாதனமாக இருக்கட்டும் என்ற போக்கிற்கு இது உதவியாக இருக்கலாமே தவிர, இதனால் உண்மையான தீர்வு காணலாம் என்று கருதமுடியும்?

பேச்சு வார்த்தைகளை முடித்துக்கொண்டு, இல்லை, இல்லை, முறித்துக்கொண்டு புறப்பட்ட சீனத்தார் செப்பினாராம் சீலம்பற்றி.

பண்டித நேருவின் பஞ்சசீலத்தைத் தாம் மனமாரப் பாராட்டுவதாகக் கூறினாராம். சீலம்பற்றிப் பேச இந்தச் சீனத்துச் சீலர் எப்படி மனந்துணிந்தாரோ, தெரியவில்லை.

சீலத்தின் அடிப்படையையே மறந்த இவர் பஞ்சசீலம்பற்றிப் பேசுவது தப்பித்துக்கொள்ளத் தயாரிக்கப்பட்ட ஒரு தந்திரம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்த எல்லைத் தகராறுபற்றி இனி என்ன நடக்குமென்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்று, என்ற போதிலும்,

**"இத்தகைய பிரச்சினைகள் நியாயமாகத் தீர்வது நமது பலத்தையே பொறுத்திருக்கிறது''**

என்று "சுதேசமித்திரன்'' தனது 26—4—60 இதழின் தலையங்கத்தில் கூறியதையே நாமும் எடுத்துக்காட்டி இதற்கொரு நல்ல முடிவு காண வேண்டுமென்று விரும்புகிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்களது உள்ளமும், உதடுகளும் ஒருங்கே இனித்தன.

அந்தக் கொற்றவனின் சாவைக் கோலாகலமாகக் கொண்டாடியது ஏதன்ஸ்.

'ஏது செய்கிறோம்? எங்கிருக்கிறோம்?' என்பதையெல்லாம் மறந்து, களிபேருவகையில் திளைத்திருந்தனர் ஏதன்ஸ் மக்கள்.

மகிழ்ச்சியின் எக்களிப்பு அவர்களது அறிவையே கிறங்கச்செய்துவிட்டது போலும்...!

இல்லையெனில் ஏதன்ஸுக்கே அணிசெய்துகொண்டிருந்த, அலெக்ஸாண்டரால் நாட்டப்பட்ட அரிஸ்டாட்டலின் பனிவண்ணப் பளிங்குச் சிலையை அக்கணமே அவர்கள் துகளாகச் சிதறியோடச் செய்ததன் காரணம்...?

'அறிவை அகிலமே பாராட்டும்' என்பதை மறந்து இழிசெயல் புரிந்துவிட்டது ஏதன்ஸ். உடைபட்ட வெண்சிலையின் பகுதிகள், அவர்களது மாபெரும் பைத்தியக்காரத்தனத்தைப் பார்த்துக் கைகொட்டிக் கெக்கலித்தன.

அடங்கவில்லை அவர்களது பாழும் உணர்ச்சிப் பெருக்கு!

இதுவரை தங்களை அரசோச்சியவனுக்குத் தத்துவமும், அரசியலும் போதித்த அரிஸ்டாட்டிலுக்கு 'அலெக்ஸாண்டரின் கைக்கூலி, ஏதன்ஸைக் கெடுக்கத் துணிந்த கருங்காலி' என்ற பட்டங்களைச் சூட்டியதோடு அன்றி, "அலெக்ஸாண்டர் சென்றவிடத்திற்கே, இவனையும் அனுப்பிவிடுவோம்' என்று எக்காளமிட்டனர் ஒருசிலர்.

பேயாட்டமாடிய கும்பலின் ஆரவாரம், ஆங்காரமாக மாறியது, அரிஸ்டாட்டிலின் மீது.

ஏதன்ஸ் நகரமே வெகுண்டெழுந்தபோது தனியொரு மனிதர் அரிஸ்டாட்டில் என்ன செய்வார்? அதிலும் தட்டிக்கேட்க ஆளில்லாது கொட்டமடிக்கும் நிலையில்......!

அக்காலத்தில் கிரேக்க நாட்டில் ஒருவனைச் சட்டப்படி கொல்ல வேண்டுமென்றால், அதற்கொரு வழியுண்டு.

"இவன் நாத்திகப் பிரசாரம் செய்கிறான்; மக்கள் மனதை எங்கோ திருப்பி நாசப்படுத்துகிறான்; நமது புனிதமான மதக் கோட்பாடுகட்குச் சாவுக்குழி பறிக்கிறான்; அந்தோ...! இளைஞர் உள்ளம் பாழாகின்றதே...! ஐயகோ...!! நீதிமன்றமே...! ஏன் கண்மூடி மௌனியாகிவிட்டாய்! எதிர்காலத்தின் சிறப்பில் உனக்கு நாட்டமில்லையா..." என்று குற்றப் பத்திரிகை படித்துக் கூக்குரலையும் கிளப்பவேண்டியது!

உடனே பெயரளவில் நீதிமன்றம் கூடும். விநோதமான விசாரணை...! பொருளில்லாத குற்றச்சாட்டுகளுக்கு, அழகாக விளக்கம் கூறுவர், ஓரிருவர். அதற்குத் தலையசைப்பர் பலர். அடுத்த விநாடி 'கொலைத்தண்டனை' எனும் கொடும் பரிசை நியாய சபை வழங்கும், அந்த அப்பாவி அறிஞனுக்கு.

அறிஞர்கள் பலரைப் பெற்றெடுத்துப் பெருமைகொண்ட கிரேக்கம், இதைப்போல் அவர்களை அநியாயமாய்க் கொல்வித்த பழியையும் சூடிக்கொண்டிருப்பதை வரலாறு வெளிச்சமாக்குகின்றது.

பகுத்தறிவுப் பாதையில் கண்கூடாகக் கண்ட உண்மைகளுக்கும், நேரான தர்க்கத்திற்கும் மட்டுமே மதிப்புத்தந்து ஏறுநடை போட்டு, தெருத்தெருவாக முழக்கம்செய்த சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸைப் பலிகொண்டது கிரேக்கத்தின் தான்தோன்றித்தனமான சட்டந்தானே...!

சாக்ரடீசின் உயிரைக் குடித்தும் தாகந்தீராத ஏதென்சின் விந்தை நீதிமன்றம் மீண்டும் கூடியது. மாண்புறு, சிந்தனை வேந்தன அரிஸ்டாட்டிலைக் காவுகொள்ள...

ஆனால், "ஒரு தத்துவஞானிக்கு ஏதன்ஸ் இழைத்த அநீதி போதும். மீண்டுமொருமுறை அந்தத் தவறு நடக்க நான் ஒப்பமாட்டேன்," என்று கூறியபடி ஏதன்சை விட்டு வெளியேறிவிட்டார் அரிஸ்டாட்டில்.

"நகரைவிட்டு ஒரு குற்றவாளி நீங்குவதாக இருந்தால், அவர் மீது ஏதும் நடவடிக்கை எடுக்கமாட்டார்களாம் ஏதன்சில்." அப்படியும் ஒரு அத்தியாயம் ஏதன்சின் காருண்யச் சட்டப் புத்தகத்திலிருந்ததே!

ஏதன்சில் அறிவை வளர்த்த மேதை, அங்கிருக்க இடமின்றி, அநாதையாக அன்னை பிறந்த ஊரான சால்சிசில் சரணடைந்தார்.

"சந்தர்ப்ப மங்கை இம்மாதிரி தனக்கெதிராகவே, சட்டமெனும் விஷந்தோய்ந்த கட்டாரியைத் திருப்புவாள்" என்று எண்ணியதேயில்லை, அரிஸ்டாட்டில்.

அவர் மனம் சாம்பியது அரசியலிலும் தத்துவத்திலும் திளைத்த அறிவு குழம்பிச் சோர்ந்தது. இதயமே சுமையாகக் கனத்தது அவருக்கு.

"அவர்களது வாழ்விற்கு ஒளி காட்டிய தனக்கா இப்பெரும் பழி......?" என்ற எண்ணம் எழவில்லை அவரிடம்.

"நன்மணங் கமழும் கிரேக்கமெனும் சுந்தரச் சோலையில், எங்கிருந்து, ஏன் இத்தகையதொரு நச்சு நெடியின் வீச்சு எழுந்தது?" என்பதுதான் புரியவில்லை அரிஸ்டாட்டிலுக்கு.

இதே எண்ணத் தீயில் சுட்டெரிந்துகொண்டிருந்த அவர், ஒருநாள்...... சாக்ரடீசின் உயிரைக் குடிக்க ஏதன்ஸ் நீதிமன்றம் தந்த அமரபானத்தை—கொடிய நஞ்சைத் தானகவே, இனிக்க இனிக்கச் சுவைத்து அருந்தினார். அந்த நஞ்சு ஏதன்ஸ் மக்கள் அவருக்குச் செய்த துரோகத்தைவிட ஒன்றும் அவரை அதிகமாய் வருத்தவில்லை.

"தன் வயிற்றிலுதித்த மற்றுமொரு அறிவுச் சுடர் அணைந்ததே," தத்துவ மேதை அரிஸ்டாட்டிலின் தளிர்மேனியும் தரையில் வீழ்ந்ததே...!' என்று கிரேக்க அன்னை கதறினாள்.

ஆர்ப்பரிக்கும் ஓதமெனச் சோகம் இழை பாய்ந்தது அவள் இதயத்தில்.

ஈடுசெய்ய வொண்ணாத குறை சூழ்ந்த உள்ளத்தோடு, அவள் தேம்பித் தேம்பி அழுவதால் உண்டான சோக ஒலி, கிரேக்கமெங்கும் நெடுநாள் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

★

காஞ்சீபுரம்

1–5–60.

தம்பி !

ஒரு உறுப்பினர்:

தென்னிந்திய ரயில்வே பாதையில், தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டுக்கும்; அதற்கு அடுத்தபடி விழுப்புரம் வரையிலும், மின்சார ரயில் எப்போது அமைக்கப்படும் என்பதுபற்றித் தயவு செய்து ரயில்வே அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

இரயில்வே அமைச்சர்:

தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டு வரையில் மின் சார ரயில் அமைப்பதற்கான திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், எப்போது நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறும் நிலையில் இப்போது சர்க்கார் இல்லை.

மற்றோர் உறுப்பினர்:

தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டு வரையில் மின்சார ரயில் அமைக்க, சர்க்கார் திட்டமிடுவதில் என்ன தடையாக இருக்கிறது, என்று கேட்கலாமா?

அமைச்சர்:

ஒன்றுமில்லை, திட்டத்தை ஏறத்தாழ உருவாக்கி விட்டிருக்கிறோம். ரயில்வே பொது நிர்வாகி, நமது என்ஜினியர்களுடன் விவரங்கள் குறித்துக் கலந்து பேசும்படியும் கூறி இருக்கிறோம். என்ஜினியர்கள், சரி என்று சொன்னதும், திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளவேண்டியதுதான்.

மற்றோர் உறுப்பினர்:

திட்டம் எப்போது முடிவான வடிவம் பெறும்? எப்போது வேலை துவக்கப்படும் என்பதை நான் அறிந்துகொள்ளலாமா?

## ஏழை சொல் அம்பலம் ஏறிவிட்டது!

அமைச்சர்:

**இரயில்வே பொது நிர்வாகி இப்போது என்ஜினியருடன் கலந்து பேசி வருகிறார் என்று நினைக்கிறேன். இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவர்களின் பதில் கிடைத்துவிடும். பிறகு, திட்டத்தை அமுலாக்க என்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனிப்போம்.**

*

ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுத்திட வேண்டாமா? அமைச்சர்தான் அவ்வளவு திட்டவட்டமாகக் கூறுகிறாரே, தாம்பரத்துக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில், மின்சார ரயில் அமைப்பதிலே தடை ஏதும் இல்லை என்று. திட்டம் கூடத்தான், உருவாகிவிட்டதாமே. முறைப்படி நடைபெற்றாக வேண்டிய 'கலந்தாலோசித்தல்' எனும் கட்டத்திலல்லவா, இப்போது நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் வீணாக ஆரவாரம் செய்வதும், தெற்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று புகார் பேசுவதும் எற்றுக்கு! உறுப்பினர் கேட்டதற்கு, இரயில்வே அமைச்சர், அன்பும் அக்கறையும் ஆர்வமும் ததும்பும் வகையில் பதில் அளித்திருக்கிறார். தெற்குச் சீமையின் குரலுக்கு அவ்வளவு மதிப்பு! மறுப்பு எழுவதில்லை! எது கேட்டாலும் கிடைக்கிறது. இதனை அறியாமல், இந்தத் திராவிடக்காரர்கள், வடக்கு—தெற்கு என்று வம்பு பேசுகிறார்களே! அமைச்சர் அளித்த பதில், இதுகளின் கன்னத்தில் அறை கொடுத்தது போலன்றோ இருக்கிறது. தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டு வரையில் மின்சார இரயில், போடமுடியாது என்றா, அமைச்சர்கூறினார்! அங்ஙனம் கூறியிருந்தால், ஆர்த்தெழலாம், அதட்டிக் கேட்கலாம், ஆகுமா ஓரவஞ்சனை என்று சாடலாம். ஆனால் நடந்தது என்ன? உறுப்பினர் கேட்டார், அமைச்சர் உள்ளனபுடன், திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்று, நமது அகம் மகிழத்தக்க விதத்தில், பதில் அளித்திருக்கிறார் — உறுதி அளித்துவிட்டார். இப்போது இதுகள் என்ன செய்யும்! கைகால் வெடவெடுக்கத் தலை கவிழ்ந்துகொண்டு, வாயடைத்துக் கிடக்கவேண்டியதுதானே! வடக்கே உள்ளவர்கள் என்னமோ, தெற்குச் சீமையை ஓரவஞ்சனையாக நடத்துவது போலவும், தெற்குக்குத் தேவையானவற்றைச் செய்ய மறுப்பது போலவும், பேசித் திரியும், இந்த பிளவு மனப்பான்மையினரைக் கண்டால், கேளுங்கள், "ஏடா, மூடா! கேட்டனையோ, இரயில்வே மந்திரியின் பேச்சை. வெட்டவெளிப் பேச்சல்ல; பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். பேச்சா அது! வாக்குறுதி!! நமது பகுதிக்கு, வரப்போகிறது வளம்; தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டுவரை, மின்சார இரயில், அமையப்போகிறது, விரைவில். அது அமையாததைக் காட்டிக் காட்டி அங்கலாய்த்துக்கொண்டிருந்தாயே! இனி என்ன பேசுவாய்! மின்சார இரயில் கிளம்பியதும், எதிரே வீழ்ந்து இறந்துபடுவாயோ!!" கேட்கவேண்டும். அப்போதுதான், 'அதுகளுக்கு,' புத்தியில் தெளிவு ஏற்படும்; பேச்சிலே அடக்கம் உண்டாகும். நூறே நாட்கள்! மின்சார இரயில் அமைந்துவிடப் போகிறது; அமைச்சர் உறுதி தந்தாகிவிட்டது, என்று காங்கிரஸ் கட்சியில் முழக்கம் எழுப்புவோர் எக்காளமிடுவர்; மூலைக்கு மூலை நின்றுகொண்டு நமது கழகத் தோழர்களேகூட, "உண்மைதானே, இரயில்வே அமைச்சர்தான், கட்டாயமாக, இரண்டு மூன்று மாதங்களில், தாம்பரம்—செங்கற்பட்டு இரயில் பாதை மின்சார மயமாகிவிடும் என்று உறுதி கூறிவிட்டாரே! வடக்கு, தெற்கைப் புறக்கணிக்கிறது என்று பேசினால், மக்கள் இனி நம்புவார்களா?" என்று எண்ணிக்கொள்ளக் கூடும். அவ்விதம் எண்ணத்தக்க விதமாகத்தான் அமைந்திருக்கிறது, இரயில்வே அமைச்சர் பேச்சு!

ஆனால், காங்கிரஸ்காரர் எக்காளமிடவும், கழகத்தவர் எண்ணமிடவும் தக்கதானவிதத்தில், இரண்டு மூன்று மாதங்களில் தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டுவரை மின்சார ரயில் திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும் என்று, பாராளுமன்றத்திலே, வாக்களித்துப் பேசிய, ரயில்வே அமைச்சர், தம்பி! திடுக்கிடாதே! மனதைத் திடம்செய்துகொள்! கேட்கும்போதே இனிக்கும் வாக்குறுதி தந்த அந்த அமைச்சர் இறந்துவிட்டார்!!

என்ன அண்ணா! இப்படி ஒரு போடுபோடுகிறாயே என்று, என்னைக் கேட்டுப் பயனில்லை, தம்பி! நான் உண்மையைத்தான் உரைக்கிறேன், அந்த ரயில்வே அமைச்சர் இறந்துவிட்டார்!!

அப்படியானால்.........? என்று, ஏதோ கேட்க, எண்ணுகிறாய்—தெரிகிறது. கேள் விஷயத்தை; தாம்பரம்—செங்கற்பட்டு மின்சார ரயில் அமையும்—மூன்று மாதத்திற்குள் — என்று உறுதிமொழி அளிக்கப்பட்டதும், அந்த உறுதி மொழி பெற, உறுப்பினர் இருவர், கேள்விகள் எழுப்பியதும், இப்போது அல்ல; ஆண்டு பத்துக்கு முன்பு! ஆமாம், தம்பி, வேடிக்கை அல்ல. படிக்கும்போது; இபபோதுதான், பாராளுமன்றத்திலே, கேட்கப்பட்டதுபோலத் தோன்றும்—ஆனால் நான், துவக்கத்திலே குறிப்பிட்டிருக்கும், கேள்வி—பதில், டில்லி பாராளுமன்றத்தில், **1950**, மார்ச்சுத் திங்கள் 17-ம் நாள், கிடைத்ததாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு!! மூன்று மாதம் பொறுத்துக்கொள்ளுங்கள். முடிவடையும் தருவாயில் இருக்கிறது திட்டம், நிறைவேற்றத் தடை ஏதும் இல்லை, என்று, ரயில்வே அமைச்சர், பேசினார், பத்து ஆண்டுகளுக்கு முன்பு. அவர் இறந்துபோய்விட்டார் —மின்சாரரயில் திட்டம், இப்போதும், 'விவாதக் கட்டத்திலேதான் இருக்கிறது. மூன்றுமாதம் என்று தவணை குறிப்பிட்டார், நூற்று இருபது மாதங்களாகிவிட்டன அந்த வாக்குறுதிகூறி; மின்சாரரயிலும் ஓடவில்லை சுவைதரும் உறுதிமொழி கூறிய, ரயில்வே அமைச்சர் கோபாலசாமி ஐயங்காரும் மறைந்து போனார்.

கேள்விகேட்ட உறுப்பினரில், ஒருவர், கனகசபை என்பார்; மற்றொருவர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!!

ஆண்டு பத்துக்கு முன்பே, அளிக்கப்பட்ட வாக்குறுதி, இன்னும் நிறைவேற்றப்படவில்லை!!

வடக்கு-தெற்குக் குறித்து, கழகம் பேசிவருவது, நியாயமற்றதா, தேவையற்றதா, என்று, காங்கிரஸ் நண்பர்கள், எண்ணிப்பார்த்திடவேண்டும்!! வடக்கு, தெற்கை எவ்வளவு, வஞ்சிக்கிறது, என்பதற்கு, இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, தெற்கு என்ன செய்ததோ அதையேதான், இன்றும் செய்யவேண்டி இருக்கிறது! மூன்று மாதம் என்று தவணை குறிப்பிட்டார், கோபாலசாமி ஐயங்கார்—இப்போது உள்ள அமைச்சர்களும், அதேபோன்ற பதிலைத்தான் தருகிறார்கள்—வரும்—நிச்சயம் வரும், என்கிறார்கள்!

இந்தப் பத்து ஆண்டுகளில், வடக்கே எத்தனை எத்தனை புதுமைகள் ஏற்பட்டுள்ளன, அவைகுறித்து எத்துணை பெருமிதத்துடன், காங்கிரஸ் தலைவர்களே பேசி மகிழ்கிறார்கள், நாமும் மகிழ்ச்சி அடையவேண்டும் என்று எண்ணுகிறார்கள். பாலைவனங்களைப் பழமுதிர் சோலைகளாக்கியுள்ளனர்; பாதாளத்தில் அடைபட்டுக்கிடந்த கனிப்பொருள்களை வெட்டி எடுத்து வெளியே கொண்டுவந்துள்ளனர்; புதிய துறைமுகங்களையும் புத்தம்புதிய தொழிற்சாலைகளையும் கண்டுள்ளனர்; நாடு விடுதலைபெற்றுவிட்டது, நம்மவர் ஆட்சி நடைபெறுகிறது என்று பாமர மக்களும் உணர்ந்து உவகை கொள்ளத்தக்கவிதத்திலே, வடிவம், வண்ணம், வளம், வாய்ப்பு எனும் எந்தத் துறையிலும் ஓர் ஏற்றம் தெரியத்தக்கவிதத்திலே, வடக்கே காரியங்களை நடத்திக் காட்டுகின்றனர்; இங்கோ, பத்து ஆண்டுகளுக்கு முன்பு, எந்த மின்சாரரயில் பாதைக்காகப், பாராளுமன்றத்திலே, கேள்விகள் கேட்கப்பட்டு, அமைச்சர் பதிலும் வாக்குறுதியும் அளித்தாரோ, அதே நிலைதான் நீடிக்கிறது; ஏன் இந்த நிலை என்று கேட்டால், 'ஜெய் இந்த்' என்று கூச்சலிட்டுக் குமுறலை அடக்கப்பார்க்கிறார்கள்.

* * *

நாம், தம்பி! இந்த ஓரவஞ்சனையை ஓயாமல், அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல், உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறி வருவதால் நமது கழகத்தில் இல்லாதவர்கள்கூட, நமது கழகத்தின், தனி அரசுக் கோரிக்கையை வெறுப்பவர் எதிர்ப்பவர்கூட, இப்போது, வெளிப்படையாகவும் சிறிதளவு வீராவேச உணர்ச்சியுடனும், தெற்குச் சீமையை பட்டினிபோட்டுப், பஞ்சத்தில் ஆழ்த்திப், பராரிக் கோலத்தில் வைத்திருக்கும் போக்கினைக் கண்டிக்கக் கிளம்புகின்றனர். தான் தீட்டிய ஓவியம், ஓர் மாளிகைக் கூடத்தில், இடம் பெறக்கண்டால், மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளும் ஓவியன்போல, இன்று, நாம் கூறிவரும் மருந்து, பிறருடைய இதயங்களிலே இடம் பெற்று, பேச்சிலே வெளிப்படுவது காணும்போது கழகம், மகிழ்ச்சி பெறுமலிருக்க முடியுமா! எத்துணை இன்பம்! எத்துணை இன்பம்!! பொருளற்ற பேச்சு, என்றனர், நாம், முதலில் பேசும்போது. இன்றோ, பல்வேறு அரசியல் முகாம்களிலுமிருந்து அதே பேச்சு எழுகிறது. வசை பேசும் வன்கணாளர்கள் என்று நம்மைத் தாக்கினர், தம்மைத் தலைசிறந்த தேசியக் குணாளர்கள் என்று கருதிக் கொண்டு கதைப்போர்; இன்றோ, இங்கு ஏன் புதிய இரயில் ஏற்படுத்தவில்லை? எல்லாம் வடக்கேதானா? ஏன் இந்த மாற்றாந்தாய்ப் போக்கு? என்று பலரும் துணிந்து கேட்கின்றனர். இல்லையே, உங்கட்கு நிரம்பச் செய்கிறோமே. இன்னும் பல செய்யப்போகிறோமே என்று கோவிந்தவல்லபபந்து, குழைகிறார், எனினும், தெற்குப் பகுதியைப் புறக்கணிக்கிறீர்கள், இது தீதே பயக்கும், இதை இனியும் தாங்கிக்கொள்ள இயலாது என்று பலரும் குமுறிக் கேட்கின்றனர்; இந்தப் புதிய பேச்சு, சுவைமிகு இசையாக நமது செவியில் வீழ்கிறது; பட்டபாடு வீண் போகவில்லை, எடுத்துச் சொன்னோம், தடுத்துப் பார்த்தனர், முடியவில்லை; இன்று அவர்களே, நாம் சொல்வதைச் சொல்கிறார்கள் என்று அறிந்து அகமகிழ்கிறோம்.

*

"பார்த்து நடக்கவேண்டாமா? மேலே வந்து மோதிக்கொள்கிறீரே?"

"பார்த்து நடக்கத் தெரியாதா.........எதிரே வருபவர்மீது இடித்துக்கொள்வதுதான், உமது பொழுதுபோக்கா?"

"யாரய்யா இது, போக்கிரித்தனம் செய்கிறீர். எதிரே வருபவர் கண்ணுக்குத் தெரியவில்லையா? முரட்டுத்தனமா?"

"கண் குருடா, உனக்கு!"

"குருடா! என்ன? உதை கேட்கிறதா?"

"திமிர் பிடித்து அலைகிறான். இப்படிப்பட்ட ஆசாமிகளுக்குச் சரியானபடிபூஜைகொடுத்துப், புத்தி கற்பிக்க வேண்டும்."

"தடிக்கழுதை! ஏ! எருமை மாடு! யாரிடம் காட்டுகிறாய் உன் மண்டைக் கர்வத்தை"

தம்பி! பார்வை பழுதானவன், பாதையில் நடந்து செல்கையிலே யார்மீதாவது மோதிக்கொள்ள நேரிட்டுவிடும். முதல் முறை சிறிது மரியாதையாகவும், பிறகு படிப்படியாகக் கோபம் வளர்ந்த நிலையிலும் கேள்விகள் கிளம்பி, இறுதியில், 'அடி தடி' அளவுக்குச் சென்றுவிடும். இது இயல்பு.

அஃதே போலத்தான், திட்டங்கள் தீட்டப்பட்டபோது, தென்னகத்துத் தேவைகள் புறக்கணிக்கப்பட்டது கண்டு, ஏனய்யா இந்தப் போக்கு என்று ஆரம்பமான பேச்சு இப்போது, மூன்றாவது, ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்படும் கட்டம் ஏற்பட்டிருக்கும் வேளையில், தட்டிக்கேட்கும் பேச்சாக, அதட்டிக் கேட்கும் போக்காக, உண்டா இல்லையா? முடியுமா முடியாதா? உன் யோக்யதையே இதுதானா? என்று கேட்கும்விதமாக, வீரம், உரிமை உணர்ச்சி, ஆத்திரம் எல்லாம் கலந்த வகையான பேச்சாக, வளர்ந்துவிட்டது. நமது கழகம் மட்டுமே இந்தப் பேச்சைப் பேசிய போது, இது கல்லாதார் போக்கு என்றுகூடப் பலரும் கருதிக்கொண்டனர்; இன்றோ கற்றறிந்தோர் என்று நாடு கொண்டாடத்தக்க நிலைபெற்றவர்களுங்கூட, இதே பேச்சினைப் பேசக் கேட்கிறார்கள், கேட்டிடவே, செச்சே! நாம்தான் தவறு செய்துவிட்டோம்

—திருமுறைக்காரர்கள் பேசியபோது, ஏனோதானோ என்று இருந்துவிட்டோம், அவர்களை ஏதுமறியாதார் என்றுகூட ஏசிவந்தோம், இப்போதல்லவா தெரிகிறது உண்மை; அவர்கள் இத்தனை நாட்களாக எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்ததத்தனையும் உண்மை, முழு உண்மை, என்று கூறிவருகிறார்கள். நாம் பெற்ற மகத்தான வெற்றி, தம்பி! இதிலேதான் இருக்கிறது!! நாம் எடுத்துக்கொண்டிருக்கிற காரியம் நமது உள்ளத்தில் இடம்பெற்று, நம்மைப்புதுமனிதர்களாக மாற்றிவிட்ட அந்த இலட்சியம், இன்று மற்றையோரால் அலட்சியப்படுத்தப்படும் நிலைமாறி, அந்த இலட்சியம் உருவானதற்கான, உணர்ச்சி, இன்று தூற்றியோர், தொலைவிலிருந்தோர் ஆகியோருக்கும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அவர்கள், அந்த இலட்சியத்தை இன்னும், ஏற்றுக்கொள்ளவில்லை; கூச்சம் காரணமாக இருக்கலாம்; அச்சம்கூட எழக்கூடும்; ஆயினும், எப்போது அவர்களுக்கு, நமக்கு ஏற்பட்ட உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதோ, இனி அவர்கள், விலைக்கு வாங்கப்பட்டாலொழிய, வழுக்கி வீழ்ந்தாலொழிய, நிச்சயமாக, இலட்சியப் பாதையில் நடந்து நடந்து, நாம் இருக்கும் இடம் வந்து நிற்பர்; இது உறுதி. சிலருக்கு அந்த நெடுவழி நடந்திடும் அளவுக்கு வலிவு இலாது போகக்கூடும்; சிலர், வழியில் இருக்கும் சத்திரம் சாவடி தங்கி இளைப்பாறிவிட்டு, பிறகு மேலால் நடக்கலாம் என்று எண்ணிப் பயணத்தை நிறுத்திப், பிறகு, சத்திரச் சாப்பாடே போதும் என்று அங்கேயே தங்கிவிடவும்கூடும்; ஆனால் தன்னலமற்றவர்கள், தளராது பாடுபடும் போக்கினர், நாடு பெரிது வீடல்ல என்ற குறிக்கோள் கொண்டோர், நிச்சயமாகப் பயணத்தைத் துவக்கிடின், இறுதிவரை நடந்து, நாம் இருக்கும் இடம் வந்தே சேருவர். எண்ணும்போதே, செந்தேன் பருகிடுமளவில்லை; தம்பி! அதற்கான அறிகுறிகளைக் காண்கிறேன், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தனை பெரியவர்கள், மெத்தப் படித்தவர்கள், மேல்நிலை உள்ளவர்கள், பலநாடு சென்று பக்குவமடைந்தவர்கள், என்போரெல்லாம், நமக்கென்ன என்று இருக்கிறார்களே, யாதும் ஊரே என்று உரைக்கின்றனரே, நமது போக்கைக் குருட்டறிவு என்றும் குறைமதி என்றும், குறுகிய மனப்போக்கு என்றும் பிளவு மனப்பான்மை என்றும்கூறி, கேலியும் கண்டனமும் வீசிநிற்கின்றனரே, நமது இதயமோ நாம் கொண்டுள்ள கொள்கை நியாயமானது என்று கூறுகிறது; நாட்டின் நாயகர்கள் என்று கூறத்தக்க விருது பெற்றோரோ, இதை வெட்டிப் பேச்சு என்கிறார்கள். நாம் என்ன செய்வது? இதயம் இடும்கட்டளையையோ மீற முடியவில்லை! முடியாது! கூடாது! இந்தப் பெரியவர்களோ, நமது உள்ளுணர்ச்சியையே ஒழித்திடத் தக்கவிதத்தில் பேசுகிறார்கள்!! என்செய்வது! என்று தம்பி! என்னைப் பொறுத்தவரையில் பல நாட்கள் எண்ணியதுண்டு. பெரியாருக்கு இதுபோன்ற நிலை பலமுறை ஏற்பட்டதுண்டு; ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

•

ஈரோடு, என் இருப்பிடமாக இருந்த நாட்கள். சித்தப்பா சீற்றமாக இருந்தாலும், அப்பா ஆர்ப்பரித்து வந்தாலும், ஓடோடி வந்து, நான் படுத்திருக்கும் இருக்கைக்குக் கீழே பதுங்கி, அப்படியே, தம்பி சம்பத்து உறங்கும் நாட்கள். யாராவது சிறிதளவு கடுமையாக நமது இயக்கத்தைப்பற்றிப் பேசினாலும், துடிதுடித்து எழுந்து, படபடவென்று பேசிடும் பருவத்தில் நான் இருந்த காலம். ஒரு மாநாடு ஏற்பாடாகி இருந்தது, ஈரோட்டில். எந்தத் திடலில் என்று அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறாய் அல்லவா? திடலில் அல்ல!! பள்ளிக் கட்டடத்தில்—கூடத்தில்.

நாங்கள் யாரும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது; திடீரென்று, சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், தாம் மாநாட்டுக்கு வருவதாக, தாமாகவே பெரியாருக்குத் தெரிவித்தார்.

ஏன் வருகிறார்? அவருக்கு இருக்கும் ஆயிரத்தெட்டு அலுவலுக்கு இடையிலே, இந்த மாநாட்டுக்கு வர எண்ணிய காரணம் என்ன? என்று யோசிக்க வேண்டி நேரிட்டுவிட்டது. எதிர்பாராத இந்த அறிவிப்பு, ஏதேதோ எண்ணங்களை மூட்டிவிடலாயிற்று.

பெரியாருக்கு, சர். சண்முகத்திடம் பெருமதிப்பு; பாசம். எனவே பயந்துபோனார்.

பாசம் இருந்தால், பயம் ஏற்படுமா என்று கேட்பாய், தம்பி! பாசம் எப்படிப்பட்டது; அதன வயமாகிவிட்டால், அது என்னென்ன பாடுபடுத்தும் என்பதை, தம்பி! உன்னால் எப்படி இன்று உணர முடியவில்லையோ, அதுபோலத்தான் எனக்கு அப்போது நிலை; இப்போது அந்தப் பாசம், என்னை என்னபாடு படுத்துகிறது என்பதை, நானன்றோ அறிவேன்.

பெரியாருக்கு, சர். சண்முகத்திடம் இருந்த பாசத்தால்தான் பயமும் ஏற்பட்டது; காரணம் என்ன தெரியுமா? சிலர், சர். சண்முகம் மாநாட்டுக்கு வருவதாகத் தெரிவித்திருந்தாரே, அதற்கு ஒரு காரணம் காட்டினார்கள்—கற்பித்தார்கள்—என்றே கூறலாம்.

விளைவு எப்படி எப்படி ஏற்பட்டுவிடக்கூடும் என்பதுபற்றி எண்ணிப்பார்க்காமல், நிகழ்ச்சிகளுக்கு, அவரவர் தத்தமக்குத் தோன்றிய வகையில், பொருள் கூற முற்படுவது, எளிதிலே நீக்கிடமுடியாத இயல்பல்லவா? அதனால்தான், அன்று சண்முகம் அவர்கள் ஈரோட்டு மாநாடு வருவது எதற்காக, என்பது பற்றி அவரவர் அவரவருக்குத் தோன்றிய காரணங்களைக் காட்டினர், அதிலே, பெரியாருக்கு மன அதிர்ச்சியே தரத்தக்கவிதத்தில், சிலர் ஒரு காரணம் காட்டினர்.

நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை, நாம் கைவிட்டுவிடவேண்டும், என்ற எண்ணம் கொண்டவர்கள், பெரியாரின் போக்கை அன்பினால் கட்டுப்படுத்தி மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர், சர். சண்முகம் ஒருவர்தாம் உளர் என்பதறிந்து அவரை அனுப்புகிறார்கள்; அவர் மாநாடு வந்து நாட்டுப் பிரிவினைத் திட்டம் நாசம் தரும், மோசம் போகாதீர் என்று பேசப் போகிறார்; அவ்விதம் வேறு எவரேனும் பேசினால், பெரியார் தமது கோபப் பார்வையாலேயே அவர்களை அடக்கிவிட முடியும்! எவருடைய வாதத்தையும் பொடிப் பொடியாக்கிடமுடியும்!! ஆனால் சர். சண்முகம்

நாட்டுப் பிரிவினையை எதிர்த்தால், அவரிடம் பாசம் கொண்டுள்ளதால், பெரியாரால் மறுத்திட, எதிர்த்திட மட்டுமல்ல, வாதிடக்கூட முடியாது; மனம் நெகிழும், குழம்புவார்; நம்ம சண்முகமா இப்படி ஆகிவிட்டார் என்று எண்ணுவார், வருத்தம் மேலிடும்; நம்ம சண்முகமே இப்படி ஆகிவிட்ட பிறகு நாம் யாரை நம்புவது என்ற எண்ணம் தோன்றும், திகைப்பு மேலிடும், என்பது பலருடைய கருத்து. அதிலே பெருமளவு உண்மையும் உண்டு. பெரியார், உள்ளபடி பயந்தார்; அன்புக்குரிய சண்முகத்தை எதிர்த்துப் பேசவேண்டிய நிலையும் ஏற்படும் போலிருக்கிறதே, என்று.

நான் உடனிருந்தேன்; என்னை அவர் பார்த்தார்; பார்வையைப் புரிந்துகொண்டேன்; சிறிது பணமும் கொடுத்தார்; புதிய சில புத்தகங்கள் வாங்க, படித்துக் குறிப்புகள் எடுத்தேன், நாட்டுப் பிரிவினைக்கு ஆதாரங்கள்.

இந்த ஆதாரங்களை, வரலாற்று உண்மைகளை எடுத்துக் கூறினால், சர். சண்முகமகூட, மறுக்கமுடியாது, என்ற தெம்பு எனக்கு.

ஆனால், நான் பெரும் ஏமாற்றம் அடைந்தேன்.

மெத்தக் கஷ்டப்பட்டு நான் தேடி எடுத்த குறிப்புகள் எனக்குப் பயன்படவில்லை!

சந்திரகுப்தன், சமுத்ரகுப்தன், அர்ஜுன், அசோகன், என்ற மாமன்னர்கள், இந்தியாவை ஒரு குடையின்கீழிருந்து ஆளத்திட்டமிட்டுத் தோற்றவரலாற்றினைப்படித்துக்குறிப்புகள், மேற்கோள்கள், பேரறிவாளரின் கருத்துரைகள்பலவும்,தயாராகவைத்திருந்தேன், பயன்படுத்த. தேவையே இல்லாமற் போய்விட்டது. ஏன் எனில், சர். சண்முகம் ஒரு சிலர் கூறியதுபோல, நாட்டுப் பிரிவினைத் திட்டத்தைக் கண்டிக்கவுமில்லை, மறுத்திடவுமில்லை; மாறாக; பிரிவினை கேட்பதிலே, தவறு ஏதும் இல்லை; உரிமையே இருக்கிறது; சாதாரண இந்து குடும்பத்திலேயே பிரிவினை கேட்க உரிமையும, பெற வழியும் இருக்கும்போது, ஒரு தனி இனம், தனி அரசு நடாத்தி வெற்றி கண்ட இனம், 'தனி நாடு' வேண்டும் என்று கூறுமலிருக்கமுடியுமா? அந்தக் கோரிக்கையைப் புறக்கணிக்கத்தான் செய்யலாமா? என்றெல்லாம் சர். சண்முகமே பேசலானார். எதிர்த்திடப் போகிறார் என்று யாரைக் குறிப்பிட்டார்களோ,—கலாம் விழைவோர், சாடி கூறுவோர் என்பவர்கள்—அதே சர். சண்முகம், தனிநாடு கேட்பதிலே, தவறு துளியும் இல்லை, மறுத்திடத் துளியும் நியாயம் இல்லை, என்று பேசினார்.

பெரியார், பிரிவினைக்கான வழக்குத் தொடர்ந்துவிட்டார்; ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள், அலட்சியம் காட்டாமல், வீணான அருவருடப்புக் கொள்ளாமல், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, நீதியும் உரிமையும் நிலைநாட்டப்படுவதற்கான வழிவகை செய்தாகவேண்டும் என்ற கருத்துப்பட, சர். சண்முகம், விளக்கம அளித்தார். சர். சண்முகம் தனி அரசு கேட்பது, சிறுபிள்ளைத்தனம் என்று கூறிடுவாரோ, என்ற அச்சம் என போன்றோருக்கு; எனவே, சர். சண்முகமே, விடுதலை உணர்ச்சியை ஊட்டத்தக்க விதத்திலே நடந்துகொள்ளும்போது எத்துணை மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார் தம்பி! எங்கள் பேச்சிலேயே ஒரு புது முறுக்கு! ஏறு நடை என்கிறார்களே, அது! அவ்வளவு மகிழ்ச்சி எமக்கு.

சர். சண்முகம் மட்டும், தொடர்ந்து அந்தப் போக்கைக் கொண்டிருந்திருப்பாரானால், தமிழக வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனை ஏற்பட்டுவிட்டிருந்திருக்கும். அவரோ, வேறு பிரச்சினைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்; பாதை வேறாகிவிட்டது. ஒரு பெரு மூச்சு; சிறிதளவு மனத்தளர்ச்சி; எனினும், கொள்கை எங்களை ஊக்குவித்தது; பயணத்தைத் தொடர்ந்து நடத்தினோம், உன போன்றாரின் தோழமையும் உழைப்பும், உறுதியும் கஷ்ட நஷ்டம் ஏற்கும் இயல்பும், கிடைத்தன. இன்று. நான் துவக்கத்தில் கூறியபடி, நமது இலட்சியம் வெவ்வேறு முகாம்களில் உள்ளவர்களின் உள்ளத்திலும் குடிபுகுந்திருப்பது காண்கிறோம், மகிழ்கிறோம். ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பது பழமொழி. அது பொய்த்துப்போய் விட்டது. ஏதுமறியாதவர்கள், எடுப்பார் கைப்பிள்ளைகள். ஏலாதனவற்றை எல்லாம் எடுத்தியம்பும் போக்கினர், என்று நம்மைக் கேலி பேசி வந்தவர்களிலே பலரும், இன்று, மெள்ள மெள்ள, நமது நோக்கத்தைப் புரிந்துகொள்ளவும், போக்கினை ஓரளவு ஆதரிக்கவும், முன் வருகின்றனர். நல்ல சமயம், தம்பி! இதை நழுவவிடலாகாது!!

•

தம்பி! சீற்றம் மேலிட்டுப் பலர், நமது கழகத்தைத் தாறுமாறான முறையில் தூற்றித் திரிகிறார்களே; வரலாறு படிக்தறியாதார்கள், நாம் காட்டும் வரலாற்றினை வெற்றுரை என்று கூறுகின்றனர்; உள்ள உணர்ச்சியை உளறல் என்றும், நாட்டுப் பற்றை நாச நினைப்பென்றும் ஏசி வருகின்றனரே, இங்கிலையில் நமக்கு ஆதரவு பெருகி வருகிறது என்று, கூறுவது, எங்ஙனம் பொருந்தும் என்று கேட்கத் தோன்றும்.

தம்பி! ஒரு கணம் எண்ணிப்பார்! எதைக்கண்டு, நீ, இதுபோலக் கேட்கிறாயோ, அதிலேயே ஓர் பேருண்மை அடங்கிக் கிடந்திடும் அற்புதம் காண்பாய்.

ஏன் எதிர்க்கிறார்கள் தம்பி! ஏன்?

நமது பேச்சு, மக்களுக்குப் பிடித்துவிட்டது, புரிந்துவிட்டது! அது தெரிந்ததால், ஆதிக்கக்காரர் கட்கு, அவர்தம் அடிவருடிகட்கு, அச்சம் குடைகிறது. எத்துணையோ பாடுபட்டு நாம் அமைத்துக் கொண்டுள்ள ஆதிக்கம் அழிந்தொழிந்து போய்விடும் போலிருக்கிறதே. என் செய்வது என்ற எண்ணம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

கிளைக்குக் கிளை தாவிடும் கடுவன்—சில வேளைகளில் மந்தியிடம் சொக்கியதால் அதுபோலச் செய்வதுண்டு, எனினும் பெரும்பாலும், தன்னைப் பிடித்துக் கொள்ள யாராரோ முயற்சிக்கிறார்கள் என்று தவறாக எண்ணிக்கொண்டு, அதன் காரணமாகத் திகில்

கொண்டு விடுகிறது; தப்பிப் பிழைக்கவேண்டும் என்றோர் தவிப்பு, கடுவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. தாவுகிறது, குதிக்கிறது, குறும்புச் சேட்டைகள் செய்கிறது; பற்களைக் காட்டுகிறது. அதைக்கண்டு, கருத்திலே தெளிவுள்ளோர், கண் சிமிட்டியும் குறுநகை காட்டியும், செல்வரேயன்றி, "ஏ! கடுவனே! உன்னால் மட்டுந்தானா, உச்சாணிக் கிளைக்குத் தாவமுடியும், இதோ பார், என்னை!" என்று கூறி, மரமேறித் தாவவா செய்வர். சிறுமதியின் விளைவாக ஏற்பட்ட சீற்றத்தாலோ, சில்லறை கிடைத்திடும் என்ற எண்ணத்தாலோ, இவர்கள் இத்துணை ஏற்றம் பெறுவதா என்ற அருவருப்பாலோ சிலர், இழிமொழி பேசித் திரிவரேல், அதனை ஒரு பொருட்டாகவும் கொள்ளலாமோ! தள்ளு குப்பையை என்று கூறிவிட்டு, நமது தூய பணியினைத் தொடர்ந்து நடாத்திச் செல்ல வேண்டும். எங்கிருந்து கிளம்பினோம்! எந்த நிலையில் தொடங்கினோம்! துணைநிற்க யார் இருந்தனர்? ஆயினும் இன்று எந்த அளவுக்கு, முன்னேற்றம் கண்டுவிட்டோம் என்பதனை எண்ணிப்பார்த்தால், தம்பி! ஏற்படும் எழுச்சியும் மகிழ்ச்சியும் உன்னையும் என்னையும் இன்ப்புரிக்கல்லவா அழைத்துச் செல்கிறது. அந்த இடம் சென்றிட்டால், விடங்கொண்ட நாவினர் வீசிடும் சுடு சொல் நம் செவிபுகவும் இயலாது என்பதனை ஏன் மறந்தாய். நிரம்பாத குடம் தளும்பிடும் பான்மைபோல, கொள்கை பதியாத மனத்தினர், குளறுவர், வேறென்ன செய்வர். அது நம்மைத் தீண்டவும் முடியாத உயர் இடமல்லவா, நாம் இருப்பது. அதை மறத்தல் அழகல்லவே, பெற்றெடுத்த செல்வியின் பேச்சொலி கேட்டு இன்புறும் தாயின் செவிக்கு குழலும் யாழும்கூடக் குதூகலம் தாராது என்றனர் ஆன்றோர். இலட்சிய ஒலி இசை எனக் கிளம்பி, இனிமை தந்திடும் இடம் வந்தபிறகு, உன் செவியில், ஊளையும் உறுமலும் வீழ்ந்திட, இடமளிக்கலாமோ!

*

தம்பி! ஒன்று கூறுவேன் அதனை என்றும் மறவாதே. நம்மைவிட மிகப் பெரியவர்கள், அறிவிலும் ஆற்றலிலும், தியாகத்திலும், தரத்திலும் திறத்திலும், மிக மிக மேலோர் என்று நாமே, நெஞ்சு நெக்குருக ஒப்புக்கொண்டு தீரவேண்டிய பேரறிவாளர்கள் இன்று நம்மீது வீசப்படும், இழிமொழிகளைவிட, மிகமிகக் கேவலமான இழிமொழிகளையும் பழிச் சொற்களையும், தாங்கிக்கொண்டனர்.

உலகே இன்று புகழுகிறது; அறிவியலுக்கே அடித்தளம் அமைத்த ஆசான் என்று, கிரேக்க நாட்டு சாக்ரடீசை. அவர் பட்டபாடு, கொஞ்சமா? ஆம், அண்ணா! மாபாவிகள், நஞ்சு கொடுத்தல்லவா சாகடித்தார்கள், என்பாய். நான், அதைக் கூறவில்லை, தம்பி! அது, அவர், கிரேக்க நாட்டுக் கொடியவர்களுக்குத் தந்த தண்டனை. இறந்துபட்டார், எத்தகைய இழிமக்கள் கிரேக்கத்தில் இருந்தனர் என்பதனை உலகு அறிந்து காரித்துப்பச் செய்துவிட்டுச் சென்றார். நான் அவர், இறந்துபட்டதைக் கூறவில்லை. அவர் உயிருடன் இருக்கும்போதே, எத்துணை இழிமொழியைக் கேட்டுக்கொண்டார் தெரியுமா.

நாடகம் தீட்டி நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்ற புலவனொருவன், வெறும்பொச்சரிப்புக் காரணமாகச், சாக்ரடிசை, முட்டாள் முரடன், கயவன் காமுகன், பொய்யன் புரட்டன், என்றெல்லாம் ஏசி, ஒரு நாடகம் தீட்டி, சாக்ரடீஸ் வாழ்ந்த நாட்களிலேயே, அவர் உலவிய ஏதன்ஸ் நகரத்திலேயே, நாடகத்தை நடத்திக் காட்டினான். நையாண்டி செய்தனர்! செச்சே! இவ்வளவுதானா, இந்தச் சாக்ரடீசின் இலட்சணம் என்று ஏளனம் பேசினர் பலர். சாக்ரடீஸ் துளியும் பொருட்படுத்தவில்லை! தாங்கிக்கொண்டார்! தடுத்தார் இல்லை! திருப்பித் தாக்கவுமில்லை!! மங்காப் புகழொளி இன்றும் அவருக்கு; அறிவாய்.

அவரை விடவா, நாம் ஏற்றமிக்கோர்! இல்லை அல்லவா? ஆம் எனின் தம்பி! நமக்கு ஆத்திரமூட்ட வேண்டும், அதன் காரணமாக அமளி மூளவேண்டும் என்ற அற்ப நோக்குடன், நாராச நடை பயிலுவோர் நாலாறு வார்த்தைகளை வீசினால், தாங்கிக்கொள்ளக் கூடாதா! கல்லடியாம், கலிலியோவுக்குக் கிடைத்தது! முள் முடியாம், ஏசுவுக்கு! நெருப்பிலிட்டனர், ப்ரூனோவை! சுட்டே கொன்றனர், ஆபிரகாம் லிங்கனையும் அண்ணல் காந்தியாரையும். எனினும், அண்ணா! அடக்கிக்கொள்ள முடியவில்லை ஆத்திரத்தை! அவ்வளவு மோசமாக ஏசுகிறார்கள், என்றும் ஆயாசப் படுகிறாயே, நியாயமா?

தம்பி! உன்னையும் என்னையும்தான், அந்த 'உயர்' பண்பு படைத்தோர் ஏசுவர், தூற்றுவர்! அறிஞனும் அறிஞன், எவன் கொடுத்தான் பட்டம்—என்று பேசுவர்! ஆளைப்பார் ஆளை! என்று கேலி செய்வர். அவன் யோக்யதை தெரியுமா? என்று கூசாமல் பொய்யுரைத்து ஏசுவர்.

அவன் பொய்யன் புரட்டன், கள்ளன் காமுகன், அடுத்துக்கெடுப்பான், ஆகாவழி காட்டுவான், அர்த்தமற்ற பேச்சுப் பேசுவான், ஆதாரமற்றகாரணம் காட்டுவான், இப்படிப்பட்டவனை அடித்தாலும் கடித்தாலும் கொன்றாலும் மென்று உமிழ்ந்தாலும் குற்றம் இல்லை, பாபம் இல்லை, நாட்டுக்கு இவன் துரோகி, நல்லன எல்லாம் அழித்தான், நாசப் பாதைதான் காட்டுவான், நம்பினோரை நட்டாற்றில் விடுவான், பெட்டி பேழை நிரப்பிக்கொள்வான் பேயாய் அலைவான்......

போதுமா, தம்பி! இவ்வளவுதான், ஏசமுடியும், ஏசட்டும். ஏசுகிறார்கள்.

ஆனால், என்னை இப்படியும், உன்னை ஓரளவுக்கும் தூற்றிப் பேசவும், இழிமொழியால் ஏசவும்தான், வசவாளர்களால் முடியுமே தவிர, நாம் எந்த நாட்டினை மீட்டிடவேண்டும், சொந்த அரசு அமைத்திடவேண்டும் என்று எடுத்துக்காட்டுகிறோமோ, அந்தத் தாய்த் திருநாட்டினை, தமிழகந்தன்னை, ஒரு துளியேனும், இழித்தும் பழித்தும் ஏளனம் செய்தும், பேச இயலுமா? என்னிடம் வண்டி வண்டியாகக் குறைகள் உள்ளன என்று பேசி, ஆசையைத் தீர்த்துக்கொள்ளட்டும், என்னையும் உன்னையும், 'என் அரும் மக்காள்! எனக்கோ தளைகள்! நீவிரோ புதல்வர்!' என்று கூறி அழைத்து, விடுதலைக்கான தொண்டாற்றும் ஆர்

வத்தை ஊட்டி, ஆணை பிறப்பித்துள்ள, தாயகத்திடம், குறை ஏது காணமுடிகிறது, இவர்களால்.

தாயகத்தின் எழிலையும் ஏற்றத்தையும், இல்லை என்று கூற, கொல்லைச் சரக்கின் நாற்றத்தையும் மிஞ்சவல்ல கொடியமொழி பேசிடும் குணாளர்களாலும், முடியவில்லையே! முடியாதே!!

எனக்குத்தான் அறிவு இல்லை, ஆற்றல் இல்லை' தரம் கிடையாது, திறம் இல்லை, என்று ஏசமுடிகிறதேயன்றி, நமதரும் நாடு வளமற்றது, வகையற்றது, மரபற்றது, மாண்பற்றது, வீரமற்றது, வரலாறற்றது என்று கூறுமுடிகிறதா!!

என் தாய் மலடி என்று கூறிடும் மகன் எங்குளான்?

என் நாடு எழிலற்றது என்று கூறிட, வேறு வேறு நேரங்களிலே இழிமகனை உழப்பவனும்கூடக் கூச்சப்படுவான்; அச்சம்கூடக் கொள்வான்.

விரலிலே புண் என்று கூறட்டும்—கண் அல்ல, கருத்துக்குருடானதன் விளைவு அத்தப் பேச்சு என்போம்—ஆயின், விரலில் உள்ள மோதிரத்திலே பதிந்துள்ள வைரத்தின் ஒளியையும் உயர்வையும் கூடவா, மறுத்திட இயலும்.

தம்பி! எனக்குள்ள மகிழ்ச்சி, இதிலேதான்.

தாயகத்தின் அருமை பெருமை, மரபு மாண்பு, இப்போது; மிகமிகச் சாமான்யர்களுக்கும், பளிச்செனத் தெரிந்துவிட்டது; எனவேதான், நம்மை இழித்தும் பழித்தும் பேசிடும் போக்கினர்கூடத், தாயகத்தை ஏசக் கூசுகிறார்கள்.

நமக்கென்று, உண்மையான, பொருத்தமான, தரம்திறம் இருக்குமானால், தருக்கரின் தாக்குதல், நம் தாள்படுதூசு ஆகிப்போகும்; எனவே கவலைகொள்ளத் தேவையே இல்லை!!

நாடு, எத்துணை ஏற்றத்துடன் ஒரு காலத்தில் இருந்துவந்தது; இன்று செங்கற்பட்டு — தாம்பரம் மின்சார ரயிலுக்காகக்கூட பத்து ஆண்டுகள் தவம் கிடந்தும் கிடைத்திட முடியாத தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறது; ஒருகாலத்தில் தரணி மெச்சிட வாழ்ந்த தாயகம், இன்று தமிழ்நாடு என்ற பெயரும் பெறுமல், பெருமை குறைந்து கிடக்கிறது; வளம் கொஞ்சும் களஞ்சியமாக இருந்த நாடு இன்று வாட்டம் கொட்டிடும் கொட்டிலாகக் கோலம்மாறித் தவிக்கிறது. வீரர்கோட்டம் இன்று எங்ஙனம் வீணர் தங்குமிடமாகித் தாழ்வுற்று இருக்கிறது, என்ற இந்த மறுக்கொணா உண்மைகள் மக்கள் மன்றத்திலே எடுத்துரைக்கப்பட்டுவிட்டது! இதனை மறுத்திடவோ, தாயகத்தைப் பழித்திடவோ, நா எழவில்லை, தீயுமிழ்வோருக்கும்.

இதனை எண்ணிடும்போது, தம்பி! எனக்கு உள்ளபடி, அவர்கள் நம்மை ஏசுவதுகூட நினைவிற்கு வாராதுபோய்விடுகிறது.

செம்பொன்னால் அணிபணி செய்தளிப்போன், கருநிறம் என்று கூறட்டும்— அதனால் அணிபணிக்குத் தினைத்துணையும் இழுக்குவாராதன்றோ.

அஃதேபோலத் தாயகம் தனி அரசாகி, தகுதி பெற்றுத் திகழவேண்டும் என்ற திட்டம் நம்முடையது! நமது வண்ணம் குறித்தோ, வல்லமைபற்றியோ, வர்க்கம் குறித்தோ, எவரெவர் ஏதேது பேசினால் தான், என்ன கெட்டுவிடும்! செந்தாமரை இருக்கிறது பக்கத்தில், தவளை அதை மதிக்கவாசெய்யும்; கண்டு மகிழவாசெய்யும்—சேறுதான் அதற்கு உறைவிடம்!! செருக்கெனும் சேற்றில் இறங்கிப், பதவியிலுள்ளோரிடம் பல்லிளித்துப் பராக்குக்கூறியும், 'பவிசு' பெறத் துடியாய்த் துடிக்கும் பேர்வழிகள், நாவடக்கத்துடன் இருப்பர் என்று எதிர்பார்ப்பது, கர்த்தபத்திடம் காம்போதியையும், புழுத்துப்போனதிடம் நறுமணத்தையும், எதிர்பார்ப்பதற்கு ஒப்பாகும். பால் பருகுவோன்தான் சீனி தேடுவான், புளித்துப்போன பானம் பருகுவோனுக்கு புழுத்துப்போன காரக்கருவாடுதானே வேண்டும் என்பார், கைவல்யம். அதுபோலவே, ஏசிப்பேசுவதன்மூலம், நம்மை ஒழித்திடலாம் என்று எண்ணிக்கிடப்போரிடம், பண்பான பேச்சு இருக்கும் என்று, எப்படி எதிர்பார்க்கமுடியும்? முருங்கையில் தேடினால் முல்லையா கிடைக்கும்!

தம்பி! ஒன்றை மறந்துவிடு, மற்ற இரண்டை மறவாதிரு.

உன்னையும் என்னையும் ஒழித்திட எண்ணி உலாவிடும் போக்கினர், உமிழ்ந்திடும் தூற்றலை, மறந்துவிடு!

அவரும்கூட, தாய்த்திரு நாட்டின், திருவைதிறத்தை மறைத்திட இயலாதிருப்பதை மறவாதிரு.

அத்திருநாடு, அரசு இழந்ததால் அனைத்தும் இழந்து ஆயிரம்கல் அகன்றுகிடக்கும் தில்லி நோக்கி எதற்கும் இரந்திடும் நிலைதனைக் கூறினோம், அதனை அன்று மறுத்தோரில் பலர், ஆய்ந்து பார்த்ததால் அனுபவம் பெற்றதால் "ஆம்! அங்ஙனம்தான்,


## விற்பனையாளர்கள் கவனத்திற்கு

○○○

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் இதழ்களின் எண்ணிக்கை விபரத்தை ஒவ்வொரு கிழமையும் புதன் கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

நமது நாட்டுநிலை உளது! எதற்கெடுத்தாலும், வடக்கு நோக்கி எடுக்கிறோம் பிச்சை, என்ற உண்மையை உணர்ந்தோம் என்று உரைத்திடக் கேட்டிடு; உன் சொல் வென்றது என்ற உண்மையை, மறவாதிரு!

ஏழை சொல் அம்பலம் ஏறாது என்ற அம் மொழி இந்நாள் பொய்மொழியாயிற்று, எடுத்து இயம்பினோம், தடுத்து ஓய்ந்தனர். பிறகு அவரும் நம்மொழி பேசிட முனைந்தனர் என்பதனை மறவாதிரு!

நம்மொழி பேசிட நல்லோர் பலரும் முனைந்து வந்ததால், முன்னிலும் அதிக ஆர்வம்கொண்டு, பணியினைத் தொடர்ந்து நடாத்திடு, தம்பி! நம்மொழி கேட்டு, அம்மொழி பேச முனைந்து வந்துள நல்லோர் யாவரும், நம் வழி நல்வழி, அஃதே எம்வழி, என்றே கூறி வருவர், துணைசெய.

அந்நாள், நன்னாள்; அஃது விரைந்திட, ஆற்றல் அனைத்தையும் அளித்திட வாராய்—அன்னையின் விலங்கினைப் பொடிப் பொடியாக்கு.

பைந்நிறப் பழனம்
பசியிலாதளிக்க
மைந்நிற முகில்கள்
வழங்கு பொன்னாடு!

பூரித்துப் பாடுகிறார், தம்பி! புலவர் பெருமகன், நந்தமிழ் நாட்டினைக் குறித்து.

இத் திருநாட்டினைத் தாக்கிட, மாற்றார் வந்த காலை, என் செய்தனர், நமது முன்னோர்!

ஈட்டியாற் சிரங்களை வெட்டிட எழுமின்!
நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்!
வாளுடை முனையினும் வயந்திகழ் நூலினும்
ஆளுடைக் கால்கள் அடியினும்
தேர்களின் உருளையினிடையினும்
மாற்றலர் தலைகள் உருளையிற் கண்டு
நெஞ்சு உவப்புற வம்மின்!

அழைப்பு இதுபோல! ஆர்த்தெழுந்தனர், நம் முன்னோர்; பகை அழித்திட, புகழ் மிகுத்திட! களம் எங்ஙனம் காட்சி அளித்தது? புலவரைக் கேள், தம்பி! பூரித்துக் கூறுகிறார்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிந்தன மருப்பு
கலங்கினர் பலர்.

வெற்றி பெற்றனர், விரட்டினர் மாற்றார்களை, அரசு நடத்தினர், அறவழி நின்றனர். நாடு, எவருக்கும் வேட்டைக் காடாகா வண்ணம், வீரப்போர் நடாத்தி, வெற்றி கண்ட பிறகு, வீரத்திருமகன்,

கனமே குழல்! செங்கயலே விழி!
மொழி கார்க்குயிலே!

என்று, தன்உள்ளம் கொள்ளைகொண்ட வேல்விழியாளிடம் பாட்டுமொழி பேசினான்—அவன் கேட்டதனைத் தந்து இன்புற்றாள் கடிமணம் புரிந்துகொண்ட கட்டழகி; அகமகிழ்ந்து ஆடினர். எனவேதான் புலவர்,

கன்னிய ரோடும்
நிலவினிலாடிக் களித்ததும்
இந் நாடே!
பொன்னுடல் இன்புற நீர்
விளையாடி இல் போந்ததும்
இந் நாடே!

என்று உளத்தில் உவகை பொங்கப் பாடுகிறார்.

தம்பி! அந்த நாடு, விடுதலைப்பெறப் பாடுபடும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். அந்த வீரப்பணியில் ஈடுபட்டுள்ள நமக்கு, வேறு நாட்டம் எழலாகாது; எழாது!

ஏலாதனவெல்லாம் கூறுகிறான், என்று ஏளனம் செய்தனர்.

ஏழை சொல் அம்பலம் ஏறிவிட்டது!!

அண்ணன்,

அண்ணாதுரை



# வாழவிடுமா சமுதாயம்?

—[சா. சதாசிவம்]—

வாழ்க்கை — ஆழமான கடல்! முதலைகளின் உறைவிடம் மட்டுமல்ல; முத்துக்களும் அங்கேதான் கிடைக்கின்றன! எல்லாச் சிப்பிகளிலும் முத்துக்கள் இருப்பதில்லை. வாழ்வில் இன்பமும் அப்படித்தான். ஆனாலும் வாழவேண்டும் என்று இதயம் துடிக்கத்தான் செய்கிறது!

வாழும் சமுதாயம் — ஒரு நீரோடை. சாதிவெறிச் சாக்கடையில் புரண்டெழுந்து, மூடக்கொள்கையெனும் புழுக்கள் நெளியும் தண்ணீரைக் குடித்த, சனாதன எருமைகள், நீரோடையைக் கலக்கும்போது, அங்கே கேடு விளையுமே தவிர, நாடு செழிக்கும் நன்மையா கிடைக்கும்?

தொல்லைகளின் தொகுப்பு நூல்தான் வாழ்க்கை! என்றாலும் அதில் இன்ப அத்தியாயங்கள் இல்லாமலில்லை!

பாலைவனத்திலே திரிபவன் நீர்நிலையைத் தேடுவதுபோல், வாழ்வில் இன்பத்தைத் தேடுகிறோம்.

வாழவேண்டும் — வனிதையவள் இதயத்துடிப்பும் அதுதான்! ஆனால் வாழவிடவில்லை நாடு! இதயமில்லார் இழைத்த இன்னல்களால், இன்பக்கனவுகள் அழிந்து, "அமைதி தேடிய அபலை ஒருத்தியின் சோக வரலாறுதான், 'வாழ், வாழவிடு!' "

பூங்கொடி — அவள்தான் வரலாற்றின் மையப்புள்ளி! அவளைச் சுற்றிப் படர்ந்த இன்னல்கள்தான் மையப்புள்ளியின் வட்ட நிகழ்ச்சிகள்.

மரம் பட்டுப்போனால், தழுவிநிற்கும் கொடியுமா கருகவேண்டும்? இலை உதிர்ந்துவிட்டால், மரம் தளிர்விடாமல் இருப்பதில்லை! ஆனாலும், பழையன கழிந்து புதியன பூத்துக் குலுங்க வேண்டிய இந்த நூற்றாண்டிலும், நூலறிவற்றோர்—எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணமற்றோர் — பித்து மனம் படைத்தோர் பிதற்றிச் சென்ற முடைநாற்றம் வீசும் மூடக் கருத்துக்களை—முட்டாள்தனமான சட்டதிட்டங்களைத் "தேவ" வாக்காகக் கருதித், தெள்ளிய நீரோடையில் நஞ்சு கலப்பதுபோல் பாவையர் வாழ்வைப் பாலைவனமாக்குகின்றனர்! அதில் சோலையமைக்கும் சீர்திருத்த நெஞ்சினரை எள்ளிச் சிரித்து, ஏதேதோ பேசுகின்றனர்! என்ன அறிவு!

இதயமிலார் இழைத்த இன்னல்களால், இன்ப நினைவுகள் நீர்மேல் குமிழியாகிப், போதுமினி வாழ்வு; போகிறேன் சாவூர்—அதிலாவது அமைதி கிட்டாதா என்றெண்ணி நஞ்சுண்டு மடிந்த நங்கை ஒருத்தியின் நெஞ்சம் நெகிழும் நடந்த கதை! படியுங்கள்; பகுத்தறிவுத் திறன்கொண்டு சிந்தியுங்கள்! அந்தச் சிந்தனை அனுதாபமாக இல்லாமல் அநீதியை அளித்தொழிக்கும் வைர நெஞ்சத்தை வளர்க்கட்டும்!

*

ஏன் பிறந்தேன் பெண்ணாக? மங்கையாகப் பிறப்பதற்கு மாபாவம் செய்தேனா? இல்லையென்றால் மனித மனமில்லா மனிதர்களின் மத்தியில் பிறந்திருக்கமாட்டேன்!

அழுதுகொண்டு பிறந்தபோது "அன்னையைக் காவுகொண்டவள்" என்ற பட்டம் பெற்றேன். அன்புக் கணவனை இழந்தபோது "மகனைப் பலிகொண்டாள் மாபாவி" என்ற ஏசலுடன் மாமியார் வீட்டினின்று துரத்தப்பட்டேன்; தனிமரமானேன்!

பருவமங்கை ஒருத்தி பண்பு தவறாமல் சமுதாயச் சந்தையிலே உலவவேண்டுமானால்... அப்பப்பா! எத்தனையோ துன்பங்கள்... அத்தனையும் பொறுத்துக்கொண்டு கூலிவேலைசெய்து, குடிசையிலே வாழ்ந்துவந்தேன் — நடைப்பிணமாக!

உற்றவள் நெஞ்சம் வாட, மற்றவள் மஞ்சம் நாடும் மனித உடல் போர்த்த மிருக மனத்தினர், "மரகதச்சிலையே! மண்ணகத்து வெண்ணிலவே! இச்சைக்கு இணங்கிவிடு இன்பம் உனை நாடும்" என்று இனிமையாகப்பேசி ஆசை நாயகியாக்க முன்வந்தனர்.

வட்டமிட்ட வாலிபர்களைக் கேட்டேன், "வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று. முகம் சுளித்தனர்!

அள்ளுகின்ற வெள்ளிநிலாத் துள்ளிவரும் இரவினிலே, இதயச் சுமையால்—அது எழுப்பும் பெருமூச்சால் உருகித் துடித்தேன்!

கூடுகட்டிக் குடியிருக்கும் குருவிகளும் கூடிக்களிக்கும்போது, குவலயத்தில் வாடி வதங்கிடவோ நான் பிறந்தேன்?

படைத்தவன் கடவுளாம்! பக்தர்கள் அப்படித்தான் சொன்னார்கள்! அந்தக் கடவுளுக்கு உருவம் மட்டுமல்ல; உள்ளமும் கல்தான்! இல்லையென்றால், இன்னலிலே மிதக்கவிட்டு இருவிழியும் மூடி, இருட்டறையில் உறங்குவானோ?

பருவ விருந்தளிக்கும் பாவையாக உருமாறி, உள்ளத்தை மரமாக்கி, அதில் மானமற்றவள் என்ற வென்னீர் பாய்ச்சி வேரறுக்க விரும்பவில்லை!

வட்டமிடும் வல்லூறுகள் வண்ணப் புறாக்களிடம அனுதாபம் காட்டுவதில்லை! பெரிய மனிதர் என்ற பட்டத்துடன் குட்டி வேட்டையாடும் குள்ளநரிகளின் கழுகுக் கண்களுக்கு அஞ்சி ஊரை விட்டே புறப்பட்டேன்.

நிலவில்லா வானம் இருட்திரையை விரித்திருந்தது! ஒரே இருள்—என் இதயம்போல்! பாதை தெரியவில்லை; ஆனாலும் பாதை தவறவில்லை!

கறுத்த வானம் கடகட என்று இடித்துச் சிரித்தது — காமவெறியன்போல்! மின்னல் கீற்று இருளைக் கிழித்தது. மின்னல்......என் வாழ்வில் இன்பமின்னல் தோன்றுமா?

மழை, உடைப்பெடுத்த வெள்ளம்போல் பெய்தது. தெப்பமாக உடல் நனைந்து, நீர் சொட்ட நடுங்கும் குளிரில் ஓடினேன், நம்பிக்கை நட்சத்திரத்தின் உதயத்தைத் தேடி!

எங்கோ தொலைவில் வெளிச்சம் தெரிந்தது. வேகமாக நடந்தேன் ஒளியை நாடி!

அது ஒரு சத்திரம்! அகல்விளக்கின் ஒளியில் அங்கிருந்த வாலிபனைக் கண்டேன். பூனைக்குத் தப்பி புலிவாயில் நுழைந்துவிட்டேனா? நினைத்தபோது நெஞ்சம் நடுங்கியது!

"யாரம்மா நீ? தெப்பமாக மழையில் நனைந்துவிட்டாயே! உள்ளே சென்று உடையைமாற்றிக்கொள்'; —அவர்தான் பேசினார். அதில் கள்ளமில்லா உள்ளத்தின் கருணை வெளிப்பட்டது.

உடையை மட்டுமல்ல, உள்ளத்தின் அச்சத்தையும் மாற்றிக்கொண்டு வெளிவந்தேன். அவர் என்னையே ஏறிட்டுப்பார்த்தார். "காமுகனல்ல; கண்ணியம் நிறைந்தவர்" அந்தப் பார்வைக்கு நான் தந்த மதிப்பீடு!

"இந்த இரவில்—பெய்யும் மழையில் — அச்சந்தரும் அடர்ந்த காட்டுவழியில்—கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையில், தன்னந்தனியாக வர எப்படி மனம் துணிந்தீர்கள்?"

"கல்லும் முள்ளும் காலைப் புண்ணாக்கும். ஆனால், கயவர்களின் கண்கள் இதயத்தைப் புண்ணாக்கு முன் ஊரைவிட்டே புறப்பட்டேன். பாலைவனத்தில் பயணம்செய்பவன் சோலையைத் தேடுகிறான்—தாகத்தைத் தீர்த்துக்கொள்ள! நான் வாழ்வைத் தேடுகிறேன் — அது நெருங்க நெருங்கத் தொடுவானம் போல் எட்டாத தொலைவிற்குச் சென்றுகொண்டே இருக்கிறது!" —பெருமூச்சுவிட்டாள் அவள்!

"உங்கள் வாழ்க்கை ஏடுகளில் சோகம் படிந்திருப்பதை உணர்கிறேன். மற்றவர்கள் துன்பங்கண்டு சிரிப்பவன் நானல்ல! மாற்றமுடியுமானால் ஏற்றது செய்கிறேன்."

"சமுதாயம் எதிர்த்தால்...?"

எதிர்ப்பிலே வளர்ந்தவன் நான்! எல்லோரும் தவறான பாதையில் சென்றால் அதையே பின்பற்ற வேண்டுமா?"

"ஆமாம்; அப்போதுதான் தூற்றுவார்கள்! அறிவுப் பாதைக்கு ஆதரவு தராதவர்களின் குடியிருப்புத்தானே இந்தச் சமுதாயம்!"

"தூற்றினால் துவளமாட்டேன்! துணிவுண்டு நெஞ்சத்தில்! சொல்லுங்கள், சோகத் ததும்பேறிய வாழ்வை! ;

"வாழ்விழந்த விதவை நான்! வாழ வழி தேடினேன். குருட்டு வழி காட்டினர்—இருட்டு மனம் படைத்தோர்! வெறுத்தேன். அதன் விளைவுதான் வெளியேறினேன். இனி இதயத்தைப் புதைத்துவிட்டு நடைப்பிணமாக உலவுவதைத் தவிர, வேறு வழியில்லை!"—வேதனையோடு சொன்னாள்.

"ஏனில்லை...? மறுமணம் செய்துகொள்கிறேன் — நீங்கள் விரும்பினால்..."

"உண்மையாகவா!" — வியப்பும் திகைப்பும் நினைப்பில் தெறித்தன!

"இதயத்தின் குரல்! அதில் பொய்யுண்டா? நம்பிக்கை பிறந்தால் நம் வாழ்வு மலரும்."

இருண்டு கிடந்த நெடுவானத்தில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. என் வாழ்வில் இருள் விலகுமா? இன்ப ஒளி பெருகுமா? அந்த நம்பிக்கையில் அவரைப் பின் தொடர்ந்தேன்.

மணிமுடி—அதுதான் அவர் பெயர். அவர் வீட்டில்தான் வேலைக்கு அமர்த்தப்பட்டேன். எங்கள் எண்ணம் நிறைவேறும் பொன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால்...அந்த ஊரே அவர் திட்டத்தை எதிர்த்தது! கோட்பாடுகளை அழிக்க வந்த கொடியவன் என்று தூற்றியது!

"அதோ போகிறாளே...தாலியறுத்தவள்! அவள் கெட்ட கேட்டுக்குக் கல்யாணம் ஒரு கேடா? புதுப்பெண்ணாட்டம் சிங்காரிச்சுகிட்டுப், பூவும் பொட்டுமா நடக்கிறாளே, அடுக்குமா? வெள்ளைச் சேலையைக் கட்டிக்கிட்டு வீட்டுக்குள்ளே கிடக்கவேண்டியவ, இப்படி நடந்தால் கடவுளுக்கே பொறுக்காதே!" என்று பழிச்சொல் கூறினர்!

என்னைப்போன்ற விதவைச் சகோதரிகள் வாழக்கூடாதா? எங்களுக்கு வாழ்வளிக்க முன்வரும் இளைஞர்களைத் தடுத்து நிறுத்துவதுதான், இந்தத் தரங்கெட்ட சமுதாயத்தின் வேலையா? சமுதாயத்தை ஆளும் சட்டத்தின் காவலர்கள், "மனைவியரை இழந்தவர்கள் விதவைகளைத்தான் மறுமணம் செய்துகொள்ளவேண்டும்" என்று சட்டம் இயற்றி விதவைகளின் விழிநீரைத் துடைப்பார்களா? இதயம் விம்மியது; பெருமூச்சை வெளித் தள்ளியது! அந்த நேரத்தில்...

"டக், டக்"—கதவு தட்டப்படும் ஒலிகேட்டுத் திறந்தேன். அங்கே...

இரத்தம் சொட்டச் சொட்ட நின்றுகொண்டிருந்தார் அவர். ஒன்றும் புரியாமல் விழித்து நின்றேன்—இதயம் நடுங்க!

"ஊரார் தந்த பரிசு"... சொல்லிக்கொண்டே படுக்கையில் சாய்ந்தார்.

"எல்லோரும் வாழவேண்டும்" என்கிறார்களே, அவர்கள் தந்த பரிசா? "ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்" என்கிறார்களே, அவர்கள் தந்த பரிசா? ஐயோ...! கொடுமையிதை என்னென்பேன்? கொள்கைவழிச் செல்லும் சீர்திருத்த வாதிகளைக் கொத்தி எறியத் துடிக்கும் இரத்தப்பசி கொண்ட கொடிய கழுகுகளா இவர்கள்? இத்தனைக்கும் காரணம் யார்? யார்? யார்?

"நீ! நீதான்!!" என் உள் மனம் அலறியது. ஆமாம்: நான்தான்! நஞ்சு நெஞ்சினர் நிறைந்த நற்றமிழ்ச் சமுதாயத்தில் பிறந்த நான்தான்! என்றால், இன்னலுற்று, இதயம்நொந்து மடிய வேண்டாம்! அவர் வாழவேண்டும்!

கதவைத்திறந்தேன்; நடந்தேன். காரிருளில் தட்டுத்தடுமாறி எங்கே செல்வேன்?

"பைத்தியக்காரி! உன்னைப் போன்ற விதவைகளின் இன்ப பூமிக்கு வழியா இல்லை! அதோ, அலைக்கரம் நீட்டி அழைக்கும் கடல்! அடர்ந்த ஆலமரம்! அரை நொடியில் பிணமாக்கும் தண்டவாளம்! குருதியில் கலந்து உயிர் குடிக்கும் நஞ்சு!"

ஆமாம்! சிரித்துக்கொண்டே சாகிறேன் — இந்தச் சீர்கெட்ட சமுதாயத்தை நினைத்து! ஏ, பழைமை வெறியர்களே! பகுத்தறிவு பெறுவீர்!

★

# கம்பளித் துண்டு

—[கனகு]—

நடுக்கும் குளிர். அவன் நடந்தான். பனி பெய்துகொண்டிருந்தது.

"என்ன சார், இப்படி—தலைக்கு ஒன்றுமில்லாமல் புறப்பட்டுவிட்டீர்கள்! தலையில் ஏதாவது போட்டுக்கொள்ளக் கூடாது?"

சொன்னவர் குளிர் தீர்க்கும் கம்பளிச் சட்டை போட்டுக்கொண்டிருந்தார். தலையில் காதோடு சேர்த்துக் கம்பளித்துண்டு ஒன்று கட்டிக்கொண்டிருந்தார்.

சொன்னவரைப்பார்த்து அவன் பொருமைப்படவில்லை. "எனக்கும் அப்படியொரு கம்பளித் துண்டு இருந்தால்......!" அவன் தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

கம்பளித்துண்டு. அதை அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இடுப்பில் கட்டிக்கொள்ளும் நான்குமுழ வேட்டி, உடம்பில் போட்டுக்கொண்டிருக்கும் அந்தச் சட்டை: மலிவானவைதாம். குளிர் தாங்காதவை; நீண்டகாலம் உழைக்காதவை. அவற்றை வாங்குவதே பெரும்பாடு. ஆறு மாதங்கள் சேர்த்துவைக்க வேண்டும் பணம். புதுவேட்டி வாங்கும்போது பழைய வேட்டியை ஒரு தடவை ஆசைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்ற நினைவுக்கே இடமிராது. அவ்வளவு கந்தலாகப் போயிருக்கும். சில நாட்கள் குதிக்கால்வரை பரவிநிற்கும் அந்தப் புதுவேட்டி. தோய்த்தபிறகு—நாளுக்கு நாளாக — முன்னேறிக் கெண்டைக் காலைவந்து தொட்டுவிடும். கொஞ்ச நாட்கள் தாம் அந்த நிலையும். ஒரே வேட்டிதான் அவன் வைத்திருக்கிறான் என்று அது அழுக்கு ஏறுமற்போகிறதா? அங்கங்கே சல்லடைக் கண் ஏற்படாமல்விடுகிறதா? சல்லடைக் கண் விழுந்த வேட்டியை மடிக்காமல் கட்டிக்கொள்ள முடியுமா? மடித்துக் கட்டிய வேட்டி எப்படிக் குதிக்கால் வரையும், கெண்டைக் கால் வரையும் வரும்? முக்கால் வாசி நாட்கள் அவன் அரை ஆடை மனிதன் தான். அந்த வேட்டியும் திடீர், திடீர் என்று கிழிந்துகொண்டுபோகும்—சட்டையுந்தான். கிழிந்த பகுதிமேல் சொந்தத் தையல் இடம்பிடித்துக் கொண்டுவிடும். திடீரென்று உட்காருவான்—அவன் மிகுந்த விழிப்போடுதான் உட்காருவான். 'டர்ர்' என்று ஏதோ ஒரு இடம் கிழிந்து போகும். மறைவிடம் தேடவேண்டியதுதான் வேட்டியை மாற்றிக் கட்டிக்கொள்ள. இப்படி நாள் ஒன்றுக்குப் பலதடவை அந்த வேட்டியை எப்படி எப்படியோ மாற்றி மாற்றிக் கட்டிக்கொண்டு போவான் அவன்.

இந்த நிலையில் உள்ளவன், கம்பளி ஆடைக்கு ஆசைப்படலாமா? அது கிடைக்குமா? அடுக்குமா?

அவன் நடந்தான். குளிர்காற்று, சுளீர், சுளீர் என்று உடம்பில் வந்து தாக்கியது. அதை அவன் சட்டைசெய்யவில்லை. அது அவனுக்குப் பழகிப் போய்விட்டது. தலையைத் தொட்டுப் பார்த்தான். இலேசான தூற்றலில் நனைந்தது போல் அது ஈரமாக இருந்தது. என்ன செய்துவிடும இந்தப் பனி! இந்தக் குளிர்! உள்ளம் அப்படிக் கூறியது உரத்தோடு. உள்ளத்தின் வழி உடலை இன்னும் கொண்டுவர முடியவில்லையே! காலையில் எழுந்தால் தும்மல், தும்மலாக வருகிறது. பிறகு திடீரென்று மூக்கு அடைத்துக்கொள்கிறது. அப்புறம் இருமல். அதற்கு வேறு மருத்துவம். இதற்கு ஒரு முடிவே இல்லையா!

மறுநாளும்—நாள்தோறும்தான்—அவன் கிளம்பினான் அந்தப் பனியில், அந்தக் குளிரில். அந்தக் கம்பளிச் சட்டைக்காரர் அன்றும் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். பாவம் அவர் கம்பளிச் சட்டைக்குள் தம்மை மறைத்துக் கொண்டு இருந்தாலும், அவன் குளிரில், பனியில் துன்பப்படுவது அவரை ஆட்டிவைத்தது. அவர் உள்ளத்தையும், உடலையும் தாக்கியது. இரக்கப்பட்ட மனிதர். மிகப் பலரில் ஒரே ஒருவர்.

அவன் எதையும் சட்டை செய்யவில்லை. நடந்தான். தலையைக் கையால் மறைத்துக்கொண்டு நடந்தான். 'நல்லவேளை, கையது கொண்டு மெய்யது பொத்தாமல், தலையதை மட்டும் பொத்திக் கொண்டு போகின்றேனே! இந்த நிலையேமேல்! இது தாழ்ந்துபோகாமல் பார்த்துக்கொள்ள முடிந்தால், அதுவே போதும். அவன் எண்ணினான் அவ்வாறு.

ஒரு நாள்: அவன் எதிர்பாராத ஒரு வேலைக்கு எதிர்பாராத ஒரு பரிசு கிடைத்தது. ஐந்து ரூபாய்! 'இந்த ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்யலாம்? என்ன வாங்கலாம்? மிகவும் பயனுள்ள ஒன்றை வாங்கவேண்டும். மிகவும் பயனுள்ள ஒன்று எது? காலுக்கு செருப்பு வாங்கலாமே! சட்டையைக் கறைபடுத்தும் இந்தப் பழைய, மலிவுப் பேனாவுக்குப்பதில் ஒரு புதுப்பேனா வாங்கிக்கொள்ளலாமா? நல்லதொரு நூல் வாங்கிவிடலாமா? மலிவுத்துணியில் ஒரு சட்டை வைத்துக்கொண்டு அப்படியே ஒருமேல்துண்டு வாங்கிவிடலாமா? அல்லது இரண்டொரு நாட்கள் நல்லுணவின சுவையைத் துய்த்துவிடலாமா? அவனுக்கு யோசனை, பெரியயோசனை, அவன் நீண்ட நேரம் சிந்தித்தான். பையிலிருந்த ஐந்துரூபாய் நோட்டை அடிக்கொருதரம தொட்டுப் பார்த்துக்கொண்டு சிந்தித்தான். ஒரு முடிவும் தோன்றவில்லை. ஒரு முடிவும் ஏற்படவில்லை.

மாலைவந்தது. மறைந்தது. இருள் சூழ்ந்தது. வழக்கமான இடத்திலிருந்து புறப்பட்டான். அவன் கிளம்புவதை எப்போதும் போல் அந்தக் கம்பளி உடைக்காரர் பார்த்துக்கொண்டிருந்தார். அவன் புறப்பட்டபோதுதான் அவர் நினைத்துக்கொண்டவர் போல் அருகில் வந்தார்.

"என்ன சார், இன்றைக்குக்கூடத் தலைக்கு ஒன்றும் கொண்டுவரவில்லைப் போலிருக்கிறதே!—இருங்கள்; இதோ வருகிறேன்" அவர் வீட்டுக்குள் ஓடினார்.

அவன் வியப்புடன் நின்றுகொண்டிருந்தான்.

வெளியில் வந்தார் கம்பளிச் சட்டைக்காரர். அவர் கையில்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

ஒரு பழைய கம்பளித்துண்டு இருந்தது. "சார், இதோ இந்தத் துண்டை வைத்துக்கொள்ளுங்கள். பாவம், எத்தனை நாட்கள் இப்படிப் பனியில் நனைந்து கொண்டு போவீர்கள்!"

அவர் நீட்டினார், அவன் நின்றான். இல்லை, திகைத்தான். அப்படியொரு அனுபவம் அவனுக்கு எப்போதுமே நேர்ந்ததில்லை. எனவே, அதைப்பற்றி அவன் சிந்தித்ததே இல்லை. யாரிடமும் இரந்தது கிடையாது அவன். கந்தலாடை மேலும் மேலும் கந்தலாகிப் போய், பல நாட்கள் அவன் அரைமனிதனாகத் திரிந்தது உண்டு. உண்ணும் உணவுக்குச் சில நாட்கள் ஏங்கியதுண்டு. அலைந்ததுண்டு. ஆனால் "நான் இரந்ததுண்டு" என்னும் சொற்றொடரைத் தன் வாழ்க்கையேட்டில் வரைந்துகொள்ள அவன் விரும்பியதே கிடையாது.

மங்கிய விளக்கொளி அவன் முகத்திற்பட்டது. அவனுடைய முகபாவம் அதன் மூலம் நன்றாக விளங்கவில்லை, கம்பளியுடைக்காரருக்கு. ஆயினும் அவன் உள்ள நிலையை அவர் ஒருவாறு உணர்ந்துகொண்டார்.

"தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் பனியில் நனைந்து கொண்டு தினந்தினம் போகின்றீர்கள் என்றுதான்........."

"இல்லை, பொறுத்தருளவேண்டும். நானே ஒரு கம்பளித்துண்டு வாங்கிவிட்டேன் இன்று காலையில். கொண்டுவர மறந்துவிட்டேன்."

அவன் நடந்தான். அவர் பதிலையோ, குறுக்குக் கேள்வியையோ—நின்று, காதில் வாங்கிக் கொண்டு, குழம்பித் தவிக்க அவனிடம் திறனில்லை. அவரும் குழம்பி நின்றுவிட்டார்.

அவன் உள்ளத்தில் அலை அலையாக எண்ணங்கள் எழுந்தன;— ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத எண்ணங்கள். சுற்றிலும் வளைந்து, தொடர்ந்து அவனைத் தாக்கிக்கொண்டு வந்த பனியையும், குளிரையுந்தான் அவன் எப்போதும் சட்டை செய்ததில்லையே! இன்று அவற்றின் நினைவுகூட இல்லை. உள்ளம் கதகதப்பாக இருந்தது.

சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான். அந்த ஐந்து ரூபாய் அப்படியே இருந்தது. "ஒன்று செய்தால் என்ன? இந்த ஐந்து ரூபாய்க்கும் ஒரு கம்பளித்துண்டு வாங்கிவிட்டால்! — மலிவு விலைக் கம்பளித்துண்டு ஒன்று. ஆமாம், அதுதான் சரி. சொன்ன சொல்லும் உண்மையாகிவிடும் அல்லவா!" அவன் முடிவு செய்துவிட்டான். நடந்தான்.

மறுநாள் அவன் முதல் வேலை கம்பளித்துண்டு வாங்கியதுதான். அவன் உடுத்திருந்த சட்டைக்கும், வேட்டிக்கும் அந்தப் புதிய ஐந்து ரூபாய்க் கம்பளித் துண்டுக்கும் இடையே எத்தனையோ வேறுபாடுகள்; ஏற்றத் தாழ்வுகள். அவை அவன் மனத்தில் உறுத்தின. "இந்தக் கம்பளித் துண்டைப்போல் இந்தச் சட்டையும், வேட்டியும் சற்று நல்லவையாக, புதியவையாக இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்!"

அந்தக் கம்பளித் துண்டை அவன் மாறி மாறிப் பார்த்தான். பார்த்துக்கொண்டே இருந்தான். அதைபபற்றி அவன் திரும்பத் திரும்ப நினைத்தான். நினைத்துக் கொண்டே இருந்தான். அதை அடிக்கடி தடவிப் பார்த்துக்கொண்டான். உதறிப் பார்த்துக்கொண்டான். மடித்துச் சில நேரம் கரத்தில் வைத்துக்கொண்டான். சில நேரம் தோளில் போட்டுக்கொண்டான். சில சமயம் அவனுக்கு அது பெருமையாய் இருந்தது. சில சமயம் அது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பெரும்பொழுது அது அவனைக் கவலையிலும ஆழ்த்தியது. அவன் எண்ணம் மாறும்பொழுதெல்லாம் அந்தக் கம்பளித்துண்டு இடம் மாறியது. மொத்தத்தில், அந்தக் கம்பளித் துண்டை அவன் வாங்கியதிலிருந்து அவனுக்கு நினைவே பிடிபடவில்லை. அவன் வழக்கமாகச் செய்யும் வேலைகள்கூட அவன் எண்ணத்துக்குள் அகப்படாமல் எங்கோ தேங்கி நின்றன.

அடுத்த நாள் அவன் வெளியூர் போக நேர்ந்தது — அவன் அடைந்து வந்த சிறிய வருமானத்திற்குத் துணைபுரிந்த, அந்தப் பெரிய தொழில் முன்னிலையாக. பஸ் பயணம். கூட்டம் மிகுதி. நெருக்கியடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏறினான். நெருக்கியடித்துக் கொண்டு பயணம் செய்தான், நெருக்கியடித்துக்கொண்டு இறங்கினான். சென்ற வேலை முடிந்தது, திரும்பினான். திரும்பும்போது:

திடீரென்று கம்பளித் துண்டின் நினைவு வந்தது. தோள்களைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான், அப்போது அவனது உள்ளம் அது 'திக்' என்று தீப்பிடித்துக் கொள்ளவில்லை. அந்த நிலையை அது வெகு விரைவில் தாண்டியது. அவன் நடக்கவில்லை. நின்றுவிட்டான். உலகத்து நிதியம் எல்லாம் அவனுக்கு உரிமையாய் இருந்து ஒரு கணத்தில் கைமாறிப் போனதுபோல் அவன் நின்றான்.

பாவம், நேற்றுக் கிடைத்த நிதியம் இன்று பறிபோய்விட்டது. அவன் மகிழ்ச்சி, ஆசை, பூரிப்பு எல்லாம் எங்கே? வெறும் கம்பளித் துண்டு உருவில் வந்தன அவை. இன்று அவை தங்கள் எதிரிகளை அவன்மீது ஏவிவிட்டு மறைந்துபோய் விட்டன.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.